பெரிய புராணத்தில் பெண்கள்

ஓர் ஆய்வு



மு. பழனியப்பன் எம்.ஏ., எம்.ஃபில்.,

பெரிய புராணத்தில் பெண்கள்

ஓர் ஆய்வு



மு. பழனியப்பன் எம்.ஏ., எம்.ஃபில்.,
தமிழ் விரிவுரையாளர்
மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி
(தன்னாட்சி ***)
புதுக்கோட்டை

மீனாட்சி நூலகம்
மீனாட்சி இல்லம்
அரிமா நகர்
பொன்னமராவதி - 622 407
புதுக்கோட்டை மாவட்டம்

நூல் விளக்கக் குறிப்பு

நூலின் பெயர்	:	பெரிய புராணத்தில் பெண்கள் ஓர் ஆய்வு
ஆசிரியர்	:	மு. பழனியப்பன்
மொழி	:	தமிழ்
பொருள்	:	இலக்கியத் திறனாய்வு
பதிப்பு	:	முதற்பதிப்பு 6.6.2000 திருவள்ளுவராண்டு 2031 வைகாசி 24.
நூலின் அளவு	:	கிரவுன் 1 8
தாள்	:	11.6 கி.கி. மேப்லித்தோ வெள்ளைத்தாள்
எழுத்து	:	10 புள்ளிகள்
பக்கம்	:	80
படிகள்	:	1000
விலை	:	ரூ.30/-
அச்சிட்டோர்	:	சூர்யா பிரிண்ட் சொலுசன்ஸ் (பி) லிட், சிவகாசி - 626 123. போன் 23315
வெளியீடு	:	மீனாட்சி நூலகம், மீனாட்சி இல்லம், அரிமா நகர் பொன்னமராவதி - 622 407 புதுக்கோட்டை மாவட்டம்
முன் அட்டை	:	கண்டனூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் உள்ள ஓவியம்

★ தமிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் தமிழ்நாடு அரசின் திட்டத்தின் கீழ் இந்நூல் நிதியுதவி பெற்றுள்ளது.



தெய்வச் சேக்கிழார்

காணிக்கை

என் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டு,

என்னைத் தமிழ்ப்படிக்க ஊக்கப்படுத்தி,

29.4.2000 அன்று இறைவனடி சேர்ந்த என்

ஆயாள், **இறைதிருமதி மீனாட்சி இராமநாதன்**

அவர்களுக்கு

பொருளடக்கம்

முனைவர். ச.வே. சுப்பிரமணியன்
மதிப்புறு இயக்குனர்

உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்,
தமிழூர்,
அடைக்கலபட்டணம் அஞ்சல் - 627 808,
திருநெல்வேலி மாவட்டம்.

அணிந்துரை

திருமிகு. மு. பழனியப்பன் அவர்களின் 'பெரிய புராணத்தில் பெண்கள்' என்ற நூலைப் படித்து மகிழ்ந்தேன். தமிழுக்கு ஒரு பரம்பரை, மரபு இருக்கிறது. அம்மரபு தமிழ்ப்பெண்களுக்கும் இருந்தது. இப்போதுள்ள சூழ்நிலை மாற்றங்கள் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு தமிழ்ப் பண்பாட்டுச் சீரழிவுகள் சமுதாயத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. காதலனோடு சேர்ந்துக் கொண்டு, கணவனைக் கொல்லுகின்ற பெண்கள் சிலரைத் தமிழ்ச் சமுதாயத்தில் பார்க்கிறோம்.

தமிழ்ச் சமுதாயப் பெண்கள் இடைக்காலத்தில் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை எடுத்துக் கூறுகிறது பெரிய புராணம். கணவன் சொல்லை முழுநிலையில் ஏற்றுக் கொள்கின்ற மனம், மரபு, அக்காலப் பெண்களிடமிருந்தது. கணவன் அந்த நிலையில் நடந்து கொண்டு இருக்கிறான். அவனைப் பற்றிய மதிப்பு அப்பெண்கள் உள்ளத்தில் மிக உயர்வாக இருந்தது. கணவன் சொன்னால் சரியாக இருக்கும். அதில் தவறோ, பிழையோ இருக்க முடியாது என்ற ஆழமான நம்பிக்கை மனைவிக்கு இருந்தது. அதற்குச் சான்று இயற்பகை நாயனார் மனைவி. கணவன் சிவவேடமணிந்த ஒருவரோடு போகச் சொல்லுகிறான்; மனைவி உடன்படுகிறாள். அவன் சொல்லை ஏற்று நடக்கிறாள். இங்கு கணவனின் கொள்கைப் பிடிப்பும், அதற்குத் தக மனைவி நடக்கும் செயலையும் பார்க்கிறோம். கற்பு என்பது மனத் திண்மையே. கணவன் கற்பித்தபடி நடத்தலே என்ற கொள்கையைப் பார்க்கிறோம். கற்பு உடல் சம்பந்தப்பட்டதல்ல; உளம், மனம்

சம்பந்தப்பட்டது என்ற நிலை இங்கு வெளிப்படுகிறது.

இயற்பகை நாயனார் தன் கருத்தைச் சொன்னபோது மனைவி,

''இன்று நீர் எனக்கு அருள் செய்தது இதுவேல்
என் உயிர்க்கு ஒரு நாத! நீர் உரைத்தது
ஒன்றை நான் செய்யும் அத்தனை அல்லால்
உரிமை வேறுளதோ எனக்கு!

எனப் பேசுகிறாள். கணவன் சொல்லை முழுநிலையில் ஏற்றுக் கொள்கின்ற நிலை.

சிறுத் தொண்ட நாயனார் தன் புதல்வன் சீராளனை சிவனடியார்க்குப் பிள்ளைக் கறி சமைத்துக் கொடுக்கத் தயாராகும் போது, மனைவி மகிழ்வோடு உடன்படுகிறாள். அங்கு முறையா? நியாயமா? போன்ற கேள்விகள் எழுவதில்லை. கணவன் சொன்னால் அது ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கும் என்ற நம்பிக்கை. இது போலப் பல பெண்டிரைப் பெரிய புராணத்தில் பார்க்கிறோம். சேக்கிழார் மனைவியை 'மனையறத்தின்' வேர்! என்றே பேசுகிறார்.

கணவன், தெய்வநிலையுடைய மனைவியைத் தெய்வமாகவே கருதுவதைக் காரைக்கால் அம்மையார் வாழ்க்கையில் பார்க்கிறோம். இங்குக் கணவன், மனைவியின் தன்மை, நிலையை உணர்ந்து மதிக்கின்றமை வெளிப்படுகின்றது.

சமுதாயச் சீர்திருத்தம் செய்த பெண்மணியாக மங்கையர்க்கரசியாரைப் பார்க்கிறோம்.

தன் தமையனைத் திருத்தி நல்வழிப்படுத்தும் தமக்கையாகவும், மணஉறுதி செய்த காரணத்தால், இறுதிவரை தனியாகவே வாழ்ந்த பெண்ணாகவும் திலகவதியாரைப் பார்க்கிறோம்.

கணவன் செயலைக் கண்டித்த பெண்ணாக, திருநீலகண்ட நாயனாரின் மனைவியைப் பார்க்கிறோம்.

சுந்தரரின் மனைவியராகிய சங்கிலியார், பரவையாரும் திருநீலகண்ட நாயனார் மனைவிபோல், கணவனை தட்டிக் கேட்கும் பெண்களாக அமைவதைக் காண்கிறோம்.

கூர்ந்து நோக்கி, நுணுகி பார்த்துத் தம் கருத்துக்களைக் கூறியுள்ளார். பழனியப்பன் நல்ல ஆய்வாளர் என்பதை இந்நூலிலுள்ள பல பக்கங்கள் பறை சாற்றுகின்றன.

பெண்மையின் பெருமையைப் பேசும் இலக்கியங்கள் சிலவற்றுள் பெரிய புராணமும் ஒன்று. அதைத் தம் ஆய்வால் வெளிக் கொணர்ந்த பழனியப்பன் அவர்களைப் பாராட்டி மகிழ்கின்றேன். இதுபோன்ற நூல்கள் சமுதாயத்திற்கு மிகத் தேவை. பல நல்ல தமிழ் நூல்களைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு இந்நூலாசிரியர் கொடுத்தல் வேண்டும் என வேண்டி, வாழ்த்தி அமைகிறேன்.

தமிழூர் அன்பன்
5.6.2000 **ச.வே. சுப்பிரமணியன்**

முனைவர். க. கனகராசு
தேர்வுநிலை விரிவுரையாளர்,
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,
மேலைச்சிவபுரி.

வாழ்த்துரை

மனிதன் தன்னைவிட உயர்ந்த ஓர் ஆற்றல் இருக்கிறதென்று உணர்ந்து, அவ்வாற்றலின் முன்னர் அச்சமும், மதிப்பும் கலந்த நிலையில் அதற்குப் பணிந்து நிற்பது மத நடவடிக்கை. ஒரு மதத்தைப் பின்பற்றுபவன் தன் வாழ்வில் கடைபிடிக்கும் உயர்ந்த குறிக்கோள்கள், அவன் சார்ந்த மதத்தின் விழுமியங்கள் ஆகின்றன. அவன் அதை அடுத்த தலைமுறைக்குத் தந்து நிலைப்படுத்த எண்ணுகையில், ஒரு குறிப்பிட்ட வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, தனக்கே உரிய பாணியில், காலச் சூழலுக்கேற்ற காப்பியமாகப் புனைந்துரைக்கிறான்.

தமிழ்மொழிக்குள்ள பல்வேறு சிறப்புகளுள் உலகப் பெருஞ் சமயங்களுக்குக் காப்பியங்கள் வைத்திருப்பதும் ஒன்றாகும். அவற்றுள் சைவ சமயத்தின் மேன்மையைப் பேசும் காப்பியந்தான் பெரிய புராணம்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டு சேக்கிழாரால் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட எழுதப் பெற்ற நூல் இது. நாயன்மார்களின் வரலாற்றை, கற்பவர் மனம் கவரும் படி எழுதப் பெற்ற நூல்.

இன்று படைப்புக் கலையை விட அதன் இரகசியத்தை, பொருளை, அழகை, செழுமையைக் காண, எத்தகு படைப்பையும் விமர்சனக் கண்கொண்டு காணும் நோக்கம் பெருகியுள்ளது.

பெரியபுராணம் பற்றிப் பேசுவோரும், எழுதுவோரும் சிவனடியார்கள் தாம் கொண்ட சமூக விழுமியங்களைத் தவறாது ஒழுகியதையும், இறைவன் அவர்களுக்கு எளியனாய் வந்து அருள் செய்ததையுமே வியந்து வியந்து பாராட்டினர். இன்னும்

குறிப்பாய்ச் சொல்வதென்றால் ஆண்களின் திறத்தையே போற்றினர்.

இங்கு என் இனிய மாணவர். பேராசிரியர். மு. பழனியப்பன் அவர்கள் எழுதிய ''பெரியபுராணத்தில் பெண்கள் - ஓர் ஆய்வு'' என்னும் இந்நூல், பெண்களின் பெருமையைப் பேசுகிறது. சிவனடியார் நிலைக்கு உயர்ந்த பெண்களின் பெற்றியையும்; நாயன்மார்கள் தாம் கொண்ட கொள்கையில், வழுவாது நின்று, இறையருளைப் பெறுவதற்குத் தோன்றாத் துணையாய், பின்புலமாய் அமைந்த பெண்களின் மாண்பினையும் எடுத்து மொழிகிறது.

மனைவியாய் இருந்தும், கணவன் வழியே தன்வழி எனக் கொண்டும், கணவன் செயலுக்கு வழிகாட்டியும், கணவனின் தவறான வழியைக் கடிந்தும், தன்னருஞ் செயலால் கணவனை விஞ்சியும், பெண்கள் வாழ்ந்த திறம் பெரியபுராணத்தின் துணை கொண்டு ஆய்வாளரால் நன்கு புடம் போட்டுக் காட்டப் பெறுகின்றது.

ஆண்களின் அளவுக்குப் பெருமையும், புகழும் வாய்ந்தவர் பெண்கள் என்பதை ஆய்வாளர் தக்க சான்றாதாரங்களோடு ஆய்ந்துள்ள பாங்கு பாராட்டற்குரியது.

நாயன்மார்களின் வெற்றி, அவர்களுக்குத் தோன்றாத் துணையாய் நின்ற பெண்களின் வெற்றியுமாம் என்று உணர வைக்கும் இந்நூல் தமிழ் இலக்கியங்களில் பெண்களின் நிலையினை ஆய்வோருக்குத் துணை செய்யும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இவர் இதுபோல் இன்னும் பல நூல்கள் எழுதி உயர வாழ்த்துக்கள்.

தொல்காப்பியன் இல்லம்
பொன் - புதுப்பட்டி
பொன்னமராவதி
1.06.2000.

என்றென்றும் அன்புடன்
க. கனகராசு

நன்றியுரை

மனித வாழ்வில் ஒவ்வொரு நாளும் சிறப்பான நாளாகும். அந்நாட்களில் அனுபவப்படிகள் பலவற்றைக் கடந்து வெற்றிக் கனிகளை எட்டிப் பறிக்கும் நாட்கள் என்றும் மகிழ்ச்சிக்குரிய நாட்களாகும். எனக்கு இந்த நாள் ஒரு மகிழ்வான நாள். எனது சிந்தனைகள் முதன் முதலாக நூல் வடிவம் பெற்று உங்கள் கைகளில் தவழும் இனிய பொழுது இது. இப்பொழுதில் இது நடக்க வேண்டுமென என்னை நடத்திச் செல்லும் இறையருளுக்கும், நூலாக்கத்திற்கு நிதியுதவி செய்த, தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறையினருக்கும், வாழ்வில் துணை நிற்கும் மனித உதவிகளுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வது எனது கடமையாகும்.

தந்தையாய், ஆசானாய், வாழ்வின் வழிகாட்டியாய் விளங்கும் முனைவர் பழ. முத்தப்பன் அவர்களுக்கும், தாயாய், அன்பின் வடிவாய், எனது எழுத்தின் தட்டச்சாளராய் உதவும் திருமதி அழகம்மை முத்தப்பன் அவர்களுக்கும் எனது தலை சாய்த்த நன்றிகள்.

எனது உயர்வில் மகிழும் புதுவயல் யெ. பெரி, காரைக்குடி சித.கயி.ராம; சோம. கணேசன் குடும்பத்தார்க்கு எனது இணையற்ற நன்றிகள்.

வாழ்க்கைத் துணையாகி, எனது இலக்கியப் பணிகளில் ஈடுபாடு கொள்ளும் துணைவி பழ. மெய்யம்மைக்கு அன்பான நன்றிகள்.

இந்நூலாக்கத்திற்குப் பெரிதும் உதவிய, மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க்கல்லூரி பேராசிரியர்கள் முனைவர் க. கனகராசு, முனைவர். பழ. சிதம்பரம் ஆகியோர்க்கும்,

புதுக்கோட்டை மா. மன்னர் கல்லூரி பேராசிரியர்களுக்கும் எனது ஒப்பற்ற நன்றிகள்.

நூலிற்கு அணிந்துரை நல்கிய பேராசிரியர், முனைவர். ச.வே. சுப்பிரமணியம் அவர்களுக்கும் பாதம் பணிந்த நன்றிகள். விரைவில் அச்சிட்டுத் தந்த சிவகாசி சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ் (பி)லிட் நிறுவனத்தார்க்கும், வெளியிட்ட மீனாட்சி நூலகத்தாருக்கும் எனது உயரிய நன்றிகள்.

அட்டைக்கான படத்தினை எடுக்க உதவிய கண்டனூர் வெ. ராமநாதன், பழனிமலை, எனது தங்கை மீனாட்சி லெட்சுமணன், அத்தான் ராம. லெட்சுமணன் அவர்களுக்கும் நன்றிகள் பல.

இந்நூலைப் படிக்கும் உங்கள் அனைவருக்கும் எனது இனிய நன்றிகள்.

நன்றியுடன்



06.06.2000
(சேக்கிழார் பிறந்த நாள்)
புதுக்கோட்டை.

முகவரி : 175, சீனிவாச நகர் 5வது தெரு, மச்சுவாடி,
புதுக்கோட்டை 622 001. தொலைபேசி : 30247

முன்னுரை

''ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், செருமன் தத்துவத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலி காதலின் மொழி என்றும் கூறுவது ஒருபுடை ஒக்குமெனின் தமிழைப் பத்தியின் மொழியெனல் பொருந்தும்'' 1 என்ற தனிநாயக அடிகளின் கூற்றிற்கேற்ப, வேறு எந்த மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்குப் பக்தி இலக்கியங்களால் கிடைக்கப் பெற்றது. தமிழ் இலக்கிய வரலாற்றில் களப்பிரர் காலம், இருண்டகாலம் எனக் குறிப்பிடப்படும். அதற்குப் பின் தோன்றிய பக்தி இலக்கிய காலம், தமிழ் இலக்கிய சமுதாய மறுமலர்ச்சிக் காலமாகும். இக்கால கட்டத்தில் தோன்றிய பன்னிரு திருமுறைகளும், நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களும், பக்தியைத் தமிழ்மண்ணில் பரப்பியதோடு, தமிழகத்து ஊர்தோறும் இலக்கியத்தையும், இசையையும் வளர்த்தன. பக்தி என்பது இறைவனை அடைவிக்கும் ஒரு வழியாகும். அதனை, இலக்கியத்தோடு, இசையோடு இணைத்துப் பார்த்த பெருமை ஆழ்வார்களுக்கும், நாயன்மார்களுக்கும் உண்டு. இவர்கள் படைத்த இலக்கியங்களில் குறிப்பிடத்தக்க சமூக மேம்பாட்டுக் கூறுகளும் இடம் பெற்றிருந்தன. அதில் ஒன்று பெண்மைக்கு உயர்வளிப்பதாகும்.

''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி வையம் தழைக்குமாம்''[2] என்று பாரதியும்,

''பெண்மை தீருமட்டும் பேசுந்திருநாட்டில்
மண்ணடிமை தீர்தல் முயற்கொம்பே''[3] என்று
பாரதிதாசனும்,

''பெண்ணுக்குச் சமஉரிமை அளிப்போம்'' என்று அரசு அறிவித்த பல சட்டங்களும், இன்று பெண்களின் முன்னேற்ற வாழ்விற்குக் குரல் கொடுக்கின்றன. இவை எல்லாவற்றையும், இவை எழுவதற்கு

முன்பே பக்தி இலக்கியங்கள் செய்திருக்கின்றன.

ஆண்கள் பெண்கள் என்ற பாகுபாடில்லாமல் அனைத்து உயிர்களையும் இறைவனிடத்தில் அணுக வைப்பதே சமயங்களில் நோக்கமாகும். பௌத்தமும், சமணமும் பெண்களை அடியோடு வெறுத்த போதிலும் - சைவமும், வைணவமும் பெண்களுக்கு ஏற்றந்தந்து, தம்மையும் தம்மைச் சார்ந்த மக்களையும் உயர்த்த வகை செய்து கொண்டன. பெண்களுக்கு ஏற்றம் தந்த காரணத்தினாலேயே, இச்சமயப் பரவலுக்கு எதிராக - தமிழகத்தில் பக்தி இலக்கிய காலத்திற்கு முன் செல்வாக்குப் பெற்றிருந்த சமயங்களான பௌத்தமும், சமணமும் போட்டி போட முடியாமல் வலுவிழந்து போயின.

சைவம், பெண்களை அடியார்களாக ஏற்றுக் கொண்டதோடு, இறைவனிடத்திலும் பாதிப்பங்கைப் பெண்ணுக்கு அளித்துப் பெருமைப்படுத்தியது. சக்தியும், சிவமுமாகச் சைவர்கள் கண்ட பரம்பொருள் நிலையை,

''தென்பாலுகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பாலு கந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவார்காண் சாழலோ''[4]

என்று மாணிக்கவாசகர் பாடுகின்றார்.

வைணவம் கடவுளையே கணவனாகக் கொண்ட ஆண்டாளை முன்னிறுத்திப் பெண்களுக்கு ஒரு உன்னத நிலையைக் காட்டியது. இப்படியே பக்தி இயக்கங்கள் பெண்களின் உயர்வையே தனது படைப்பு நாடியாகக் கொண்டு தமிழகத்தில் நிலை பெற்றன.

ஆய்வு நோக்கம் :

இலக்கியங்களில் காணப்படும் சமுதாயங்கள் கால வரலாறாகவும், வாழ்வில் அறநெறி வெளிப்பாடுகளாகவும் அமைகின்றன. எனவேதான் இக்கால ஆய்வாளர்கள் இலக்கியங்களில் கூறும் சமுதாயப் போக்கினை ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொள்கின்றனர். அந்த அடிப்படையில்

சேக்கிழார் காட்டும் பெண்மைச் சமுதாயம் ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொள்ளப் பெற்றிருக்கிறது. இவ்வாய்வு, முதுகலை பட்ட ஆய்வுநிலை நோக்கத்திற்கு ஏற்ப, குறிப்பிட்ட அளவில் பெரியபுராணம் காட்டும் பெண்மைச் சமுதாயச் சூழலை விளக்குவதாகவும், அச்சூழலால் இற்றைச் சமுதாயம் எத்தகைய பயன்பெறும் என்பதை விளக்குவதாகவும் அமைகின்றது.

ஆய்வெல்லை

பக்தி இலக்கியங்களில் பெண்களின் உயர்வை ஆராய்தல் வேண்டும் என்ற நோக்கத்தோடு, பெரியபுராணத்தில் இடம் பெற்றிருக்கிற பெண்களின் பெருமையைக் காணுதல் என்ற சிறப்புநிலை ஆய்வாக இவ்வாய்வு எடுத்துக் கொள்ளப் பெற்றிருக்கின்றது. இச்சிறப்பு நிலை ஆய்வும், நாயன்மார்களாக இடம்பெற்ற பெண்கள் முதல் சிவனடியார்களின் வரலாற்றில் சிறுநிகழ்ச்சிகளில் இடம் பெற்றுள்ள பெண்கள் வரை என்ற குறிப்புநிலை ஆய்வாக மேற்கொள்ளப் பெற்று எல்லை வகுக்கப் பெற்றுள்ளது.

ஆய்வுப் பகுப்புகள்

இவ்வாய்வு நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதல் இயலில் சைவசமயம், பெரியபுராணம், பெரிய புராணத்தில் பெண்கள் ஆகிய ஆய்வுப் பொருள்களின் அறிமுக நிலை இடம் பெறுகின்றது.

இரண்டாம் இயலில் நாயன்மார் எனப் பெருமை பெற்ற பெண்களான காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார் ஆகியோரின் வாழ்வும், பணியும், பெருமை பெற்ற நிலைக்களன்களும் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

மூன்றாம் இயலில் நாயன்மார்களுக்கு மனைவியராக அமைந்து சிறப்புப் பெற்றோரும், அவர்கள் எவ்வாறு நாயன்மார்களுக்கு உதவி புரிந்தனர் என்பதும் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

நான்காம் இயலில் நாயன்மார்களுக்கும் மனைவியரல்லாத

பெண் உறவினர்களும், பிற பெண்களும் அவர்களின் செயல்களும் விளக்கிக் காட்டப்பெற்றுள்ளன.

இவ்வாய்வினின்று கண்டறியப்பட்ட, முடிவுகள் முடிவுரையில் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன.

பின் இணைப்பில் பெரியபுராணத்தில் இடம் பெற்ற பெண்களின் பெயர்ப் பட்டியல் விளக்கத்திற்காகத் தரப் பெற்றுள்ளது. இறுதியில் துணைநூற் பட்டியல் இடம் பெற்றுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாறு, சோலை நூலகம், மதுரை, அக்டோபர் 1980, ப.276.
2. மகாகவி பாரதியார் கவிதைகள், ‘வள்ளுவர் பண்ணை, சென்னை, 1990, ப.180.
3. பாரதிதாசன் கவிதைகள் முதற்தொகுதி, செந்தமிழ் நிலையம், இராமச்சந்திரபுரம், 1974, ப.3
4. 8ஆம் திருமுறை, தருமையாதீனம், ஜுன் 1966, ப.381.

1. பெரியபுராணம் - ஓர் அறிமுகம்

1.1. சமயம்

சமயம் என்பது மனிதனால் உருவாக்கப்பட்டது. அது மனிதனுக்கும், அவனுக்கு மேலான ஆற்றல் அல்லது ஆற்றல்களுக்கும் இடையிலான தொடர்பு பற்றியதாகும். நம்பிக்கைகள் சடங்குகள் கலந்தது; மனித மனத்திற்குச் சக்தியும், துணையும், வலிமையும் தரக்கூடியது.

தமிழ் இலக்கிய வரலாற்றைக் காணின் உலகளாவிய சமங்கள் பலவற்றின் கொள்கைகளைப் பறை சாற்றி நிற்கும் இலக்கியங்கள் மலிந்திருப்பதைக் காணலாம். அவ்வழியில் சைவசமய இலக்கியங்களும் தனித்த இடம் பெறுகின்றன.

1.2. சைவசமயம்

''சைவம் என்பது சிவசம்பந்தம் உடையது எனப் பொருள்படும், அஃது உலகமுதற் பொருளாகிய கடவுளைச் சிவம் எனத் தெளிந்து வழிபடும் நெறிக்குப் பெயரர்கி வழங்கி வருவது.''[1]

''சைவம் என்பதை விளக்கும் திருமூலர் சைவம் சிவனுடன் சம்பந்தமாவது என்பர். எல்லாப் பொருள்களையும் கடந்த நிலையிலும், எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கும் பரம்பொருளையே 'சிவன்' எனக் கூறினாலும், அப்பரம்பொருள் நம்முடன் தொடர்பு கொள்ள எடுத்துக் கொண்ட திருக்கோலமும், அத்திருக்கோலத்தைக் குறிக்கும் திருநாமமும் இங்கு பரம் பொருளைச் 'சிவன்' எனக் குறித்ததற்குக் காரணமாகும்.''[2] இத்திருக்கோலத்தின் வாயிலாகவும், இத்திருநாமத்தின் வாயிலாகவும் பரம்பொருளோடு தொடர்பு கொண்டு வாழ்தலே சைவம் எனல் வேண்டும்.

''சிவபெருமான் என்றும் உள்ளவர், உயிர்களும் என்றும் உள்ளவை. என்றும் உள்ள சிவபெருமானை என்றும் உள்ளவுயிர்கள் அடைந்து பேரின்பம் அநுபவிப்பதற்கான வழியும் என்றும் உள்ளது. அந்த வழிதான் சிவசமயம் - சிவத்தை அடைவிக்கும் சமயம்; சைவ சமயம்.''[3] இச்சமயம் பல

பிரிவுகளைக் கொண்டது.

திருமந்திரம் 1. சுத்தசைவம், 2. அசுத்தசைவம், 3. கடுஞ்சுத்தசைவம், 4. மார்க்கசைவம் என நான்கு பிரிவுகளைப் பற்றிப் பேசுகின்றது. சித்தாந்த நூல்களில் அகப்புறச் சமயம், அகச்சமயம் (6 + 6) என்னும் தலைப்புகளில் பன்னிரண்டு பிரிவுகளைக் காணமுடிகின்றது. அவை 1. பாசுபதம், 2. மாவிரதம், 3. காபாலம், 4. வாமம், 5. பைரவம், 6. ஐக்கியவாத சைவம், 7. பாடானவாத சைவம், 8. பேதவாத சைவம், 9. சிவசமவாத சைவம், 10. சிவசங்கிராந்தசைவம், 11. ஈசுவரவவிகாவாதசைவம், 12. சிவாத்துசைவம் என்பனவாகும்.[4]

சைவத்தைப் பதினாறு வகையாகப் பாகுபடுத்திக் கூறும் மரபுமுண்டு. அவை 1. ஊர்த்த சைவம், 2. அனாதிசைவம், 3. ஆதிசைவம், 4. மகாசைவம், 5. பேதசைவம், 6. அபேதசைவம், 7. அந்தரசைவம், 8. குணசைவம், 9. நிர்க்குணசைவம், 10. அத்துவாசைவம், 11. யோகசைவம், 12. ஞானசைவம், 13. அணுசைவம், 14. கிரியாசைவம், 15. நாலுபாதசைவம், 16. சுத்தசைவம் என்பவையாகும்.5

இவைகள் அனைத்துமே கோட்பாடுகள். சிவகிரியைகள் அளவில் சிறிது வேறுபடுவன அன்றி முற்றாக மாறுபட்டு நிற்கும் சமயக் கோட்பாடுகள் அல்ல.

இவற்றையெல்லாம் விட முதன்மையானது, சைவசித்தாந்தம் அல்லது சித்தாந்த சைவம் எனப்படும். பதி - இறை; பசு - உயிர்; பாசம் - தளை என்ற மூன்றினைக் கொண்டு சித்தாந்த சைவம் தன் கொள்கைகளை விளக்குகின்றது.

சைவசமயம் தோன்றிய காலம் அறுதியிட்டுக் கூறயியலாத வகையில் இருக்கின்றது. இதன் தொன்மைக்குப் பழம்பெரும் நூல்கள், வழிபாட்டு முறைகள், வரலாற்றுக் குறிப்புகள், தொல் பொருள்கள், அகழ்வாராய்ச்சிகள் என்பன சான்றாக உள்ளன.

1.3 சைவசமய இலக்கியங்கள்

கிடைத்திருக்கும் தமிழ் இலக்கியங்களில் சைவசமயம் சார்ந்த இலக்கியங்கள் காலம் தோறும் தோன்றிய நிலையை

உணரமுடிகிறது. சைவ இலக்கியங்களில் குறிப்பிட்ட சில திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

'திரு' என்ற சொல் செல்வம், இறை, அழகு, ஒளி, பொலிவு, தெய்வத்தன்மை, நல்வினை போன்ற பல பொருள்களைக் கொண்டுள்ளது. 'முறை' என்ற சொல் ஒழுங்கு, ஒழுக்கம், உறவு, கட்டு, நன்மை போன்ற பொருள்களைக் கொண்டுள்ளது. உயிருக்கு ஒழுங்கையும், அதனால் வருகின்ற ஒழுக்கத்தையும், உயிருக்கு இறைவனோடு உள்ள உறவையும், உயிர் இறைவனோடு அடைகின்ற கூட்டையும்,' அதனால் உயிருக்கு ஏற்படுகின்ற நன்மைகளையும் திருமுறைகள் கூறுகின்றன.[6]

திருமுறைகள் பன்னிரண்டு. இத்திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகள் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியின் துணைகொண்டு முதல் ஆதித்தசோழன் காலம் அல்லது அவன் புத்லவன் முதல் பராந்தகசோழன் காலத்தில் தில்லைக் கோயிலிலிருந்த ஏடுகளை எடுத்துத் தொகுத்து வகைப்படுத்தப்பட்டன. எட்டாந் திருமுறை முதல் பதினோராம் திருமுறை வரை சேக்கிழாருக்கு முன் வாழ்ந்தவர்களால் வகைப்படுத்தப்பட்டன. பின்பு பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாக அமைக்கப்பட்டது. முதன்முதலில் திருமுறை என்ற பெயர் மூவர் தேவாரங்களுக்கு மட்டுமே வழங்கியதாகத் தெரிகிறது.[7] பின்புதான் ஏனைய சைவ அடியார்கள் எழுதிய நூற்களுக்கும் விரிந்தது.

இவையல்லாது சாத்திர நூல்கள் பதினான்கு உண்டு. அவை : திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா இருபஃது, உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, உண்மைநெறி விளக்கம், கொடிப்பாட்டு, நெஞ்சுவிடுதூது, சங்கற்பநிராகரணம் என்பனவாகும்.

1.4 திருத்தொண்டர் புராணம்

வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம், தொல்காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை - ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம், தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாம் தரம்''.[8]

என்று பழம்பாடல் ஒன்று பெரிய புராணத்தைத் தமிழில் உள்ள மேலான நூல்களுள் ஒன்று எனக் கூறுகின்றது. தமிழ் வேதமாகக் கருதத் தக்க பெருமையது.

"Every Tamil student should read the truly marvallous PERIA PURANAM"

என்கிறார் ஜி.யு. போப். [9] துண்டு துண்டாகப் பல வரலாற்றின் கோர்வையாக இருப்பினும் இஃதோர் பெருங்காப்பியமாகவே திகழ்கின்றது. பக்திச்சுவையுடன் கவிதைகள் ஒவ்வொன்றும் விளங்குகின்றன. வருணனை வளமும், உவமை நலமும், சொல் வளமும், கற்பனைத் திறமும் கொண்ட மாகாவியம் ஆகும். அறுபத்து மூன்று தனியடியார்கள், ஒன்பது தொகை அடியார்கள் ஆகியோரின் வரலாறுகளைப் பாடும் வரலாற்று நூலாகவும், இது திகழ்கின்றது. இஃது சீர்திருத்தச் செந்தமிழ்க் காப்பியம் (Revolutionary Epic), நாடகக் காப்பியம் (Dramatic Epic), சமுதாயக் காப்பியம் (Social Epic), சமயப் பெருங்காப்பியம் (Religious Epic) வரலாற்றுச் சிறப்பும் செய்திகளும் கொண்ட காப்பியம் (Both Historic and Historical Epic) என பலநிலைகளில் வைத்துப் போற்றப்படுகிறது. இத் திருத்தொண்டர் புராணம் மக்கள் தொண்டையே மகத்தான தொண்டாக, இறையடியார்கள் செய்தமையினால் அவர்களின் தொண்டின் பெருமைகருதிப் பெரியபுராணம் என அழைக்கப்படுகிறது.

1.5 பெரிய புராண மூலங்கள்

சேக்கிழார் பெரியபுராணம் பாடுவதற்கு முதல் நூலாக அமைந்தது சுந்தரர் பாடிய திருத் தொண்டத்தொகை ஆகும். "வழிநூலும் வகை நூலுமாகியது நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகும். மூவர் தேவாரம் மற்றும் காரைக்காலம்மையார் பாடிய மூத்த திருப்பதிகம், இரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி, என்பவையும், சேரமான் பெருமாள் இயற்றிய திருக்கயிலாய ஞானஉலா, பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை என்பவையும் சேக்கிழாருக்குப் பயன்பட்டன"[10]என்கிறார் அ.ச. ஞானசம்பந்தம். சேக்கிழாருக்குக் கிடைத்த பழங்

கல்வெட்டுக்களும், அமைச்சர் பெருமானாகிய இவர் அரசாங்கஞ் செலுத்தலிற் கண்ட சாசனம் முதலியவையும், உலக வழக்கிற் கேட்ட சரித வரலாறுகள் முதலியவைகளும் ஆதரவாயின.

1.6 பெரியபுராணம் - நூலமைப்பு முறை :

இந்நூல் திருமலைச் சருக்கம் முதல் வெள்ளானைச் சருக்கம் ஈறாகப் பதின்மூன்று சருக்கங்களை உடையது. முதற்கண் உள்ள திருமலைச் சருக்கம் - திருமலைச் சிறப்பு, திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு, திருக்கூட்டச் சிறப்பு, தடுத்தாட் கொண்ட புராணம் என ஐந்து பகுதிகளைக் கொண்டதாகும்.

இதனையடுத்த திருத்தொண்டத் தொகையின் பதினொரு பாடல்களுள் போற்றப் பெற்றுள்ள தில்லைவாழ் அந்தணர், திருநீலகண்டக் குயவனார் முதல் திருநீலகண்டப் பாணர் ஈறாகவுள்ள அடியார்களின் வரலாறுகள், அவ்வத் திருப்பாடற்குரிய முதல் குறிப்பினையே பெயராகக் கொண்டு தில்லைவாழ் அந்தணர் சருக்கம் முதல் மன்னிய சீர்ச்சருக்கம் ஈறாகப் பதினொரு சருக்கங்களில் வகுத்துரைக்கப் பெற்றுள்ளன.

சுந்தரர், சேரநாட்டுத் தலைநகராகிய கொடுங்கோளூரில் திருவஞ்சைக் களத் திருக்கோயிலில் எழுந்தருளிய இறைவனைப் பாடிப்பரவியிருக்கும் நிலையில், கயிலைப் பெருமானால் அனுப்பப் பெற்று அங்கு வந்த வெள்ளானையின் மீது அமர்ந்து, தம் தோழராகிய சேரமான் பெருமாள் பரிமீதமர்ந்து உடன்வரத் திருக்கயிலாயத்தை அடைந்து, அம்மையப்பரைக் கண்டு வழிபட்டுச் சேரமான் பாடிய திருக்கயிலாய ஞானவுலா இறைவன் திருமுன்னர் அரங்கேறக் கேட்டு மகிழ்ந்து, முன்புபோல் தமக்குரிய அணுக்கத் திருத் தொண்டினையேற்று இன்புற்ற செய்தியை விரித்துரைக்கும் இறுதிப் பகுதி 'வெள்ளானைச் சருக்கம்' என்பதாகும்.

1.7 பெரியபுராணப் பெண்கள் - அறிமுகம்

திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் ''தொகையடியார், தனியடியார்'' என இருதிறத்து அடியார்களைக் காணுகின்றார். இதில் சுந்தரர் தன்னை உளப்படுத்திக் கொள்ளாது, தனியடியார்கள்

அறுபத்து இருவர் என்றும், தொகையடியார் ஒன்பதின்மர் என்றும் கருதிப் பாடியுள்ளார். "நம்பியாரூரர் இங்குத் தம்மை ஒரு தனியடியாராக ஓதாவிடினும், 'ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காள்' என்றும், 'எல்லா அடியவர்க்கும் அடியவர் என்றும், அருளிச் செய்தமையால், அவருங்கூட தனியடியார் அறுபான் மூவராயினர்"[11] என்ற குறிப்பிலிருந்து அறுபத்திமூன்று தனியடியார் என்ற தொகை பெறப்படுகிறது. சுந்தரர் பாடிய இவ்வறுபத்து மூவரையே நம்பியாண்டார் நம்பி, ஒருவரிச் செய்தியை ஒவ்வொரு பாடலாகப் பாடுகிறார். பின்பு சேக்கிழார் தனித்தனிப் புராணமாகப் பாடியுள்ளார். எனவே தனி அடியார்கள் எண்ணிக்கையில் எவ்வித வளர்ச்சியும் இல்லை எனக் கொள்ளலாம்.

பெரிய புராணத்தில் இடம்பெறும் அறுபத்துமூன்று நாயன்மார்களுள், பெண்பாலர் மூவராவர், அவர்கள் காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார் ஆகியோர். இவர்களேயன்றிப் பிற நாயன்மார் வாழ்க்கையில் பங்கு கொள்ளும் பெண்களையும் காணலாம். மனைவி, மகள், தாய், தமக்கை என்று பல்வேறு உறவுகளில் நாயன்மார்கள் வாழ்வில் இடம்பெறும் பெண்கள் பலர். மனையவியராயினோர், தம் நாயகனுக்கு வாழ்க்கைத் துணையாய் நின்றதோடமையாது சைவவழித் துணையும் ஆயினர். இறைவழி பாட்டிலும், சிவனடியார் வழிபாட்டிலும், ஆடவர்க்கு உறுதுணை செய்தனர். தாயாகவும், தமக்கையாகவும், வாழ்ந்த பெண்கள் தம்மில், சிறியவர் புன்னெறி அதனிற் சென்றால் விலக்கி, நன்னெறி ஒழுக்கம் செய்து அவர்களையும் இறையடியாராக்கினர். மொத்தத்தில் உலக வாழ்க்கைக்கு, உரிய சமுதாய நெறியில் பெண்கள் கொண்ட பங்கினையும், ஆன்மீக வாழ்வுக்கான சமய நெறியில் அவர்தம் ஏற்றத்தையும் சால்புற ஒருங்கே பெரியபுராணம் புலப்படுத்துகின்றது. பல நாயன்மார்களின் திருத்தொண்டின் அருமை பெருமைகள், அதில் அவர்கள் பெற்ற வெற்றி முதலிய அனைத்தும், அவர்களது வாழ்வில் தொடர்பு பெற்ற பெண்களின் தகுதியால் அமைந்தவை என்பது உண்மையாகும்.

இதனடிப்படையில் பெரியபுராணத்துப் பெண்களை மூன்று

வகையில் காணலாம். அவை நாயன்மார் எனப் பெருமை பெற்றோர், நாயன்மாரின் மனைக் கிழத்தியர், நாயன்மாரின் உறவினர்; பிறர் என்பனவாகும். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு இயலாக விரித்துரைக்கப் பெறுகின்றன.

குறிப்புகள்

1. க. வச்சிரவேல் முதலியார், சைவம், தமிழ்நாடு அரசினர் அறநிலைய ஆட்சித்துறை, ப.1.
2. ப. அருணாசலம், சைவசமயம், நாகர்கோவில், ஆகஸ்ட் 1979, ப.2.
3. க.பொ.த. (சாதாரணம்)பரிட்சைப் புதிய பாடத்திட்டத் தொகுதி, கொழும்பு விவேகானந்த சபை வெளியீடு, கொழும்பு, 1978, ப.1
4. ப. அருணாசலம், சைவசமயம், ப.10
5. மேற்படி சைவசமயம் ப.10
6. ந. சஞ்சீவி (ப.ஆ), தெய்வத்தமிழ் முதல் மூன்று திருமுறைகள், ச.வே. சுப்பிரமணியம் (க.ஆ), சென்னைப் பல்கலைக் கழகவெளியீடு, 1975, ப.2.
7. க. வெள்ளைவாரணன், பன்னிரு திருமுறை வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு. 1975, ப.2
8. மது.ச. விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாற்றுக்களஞ்சியம், முதல் தொகுதி, ஐந்திணை பதிப்பகம், சென்னை, டிசம்பர் 1987, ப.210
9. மேற்படி.
10. அ.ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, சனவரி 1987, ப.431.
11. ஏழாந்திருமுறை, தருமையாதீனம், 1964, (திருத்தொண்டத் தொகை குறிப்புரை) ப.303.

2. நாயன்மார் எனப் பெருமை பெற்றோர்

சிவனடியார்கள் சிறப்புக்களை நுவலும் நூல் பெரியபுராணம். இதில் நாயன்மார் எனப் போற்றப் பெறும் அறுபத்து மூன்று அடியார்கள் சிவபெருமானிடம் கொண்ட பற்றும், அவர்களின் வாழ்வில் சிவபெருமான் நிகழ்த்திய அற்புத நிகழ்வுகளும், அடியார்களின் வரலாற்றுடன் தொகுத்து உரைக்கப்பட்டுள்ளன. இவ்வடியார்களுள் மூவர் பெண்கள். அவர்கள் காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார் ஆகியோர் ஆவர். இம்மூவரே நாயன்மார் என்றும் பெருமை பெற்றவர்கள். இம்மூவரின் வரலாறுகளையும், பண்புகளையும், செயல்பாடு களையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

2.1. காரைக்கால் அம்மையார்

இவர் சேக்கிழாரின் நூல் அமைப்பு முறையில் இடம்பெறும் முதல் பெண் நாயன்மார் ஆவார். இவ்வம்மையார்,

''பேயார்க்கும் அடியேன்''[1] என்று சுந்தரராலும்,

''நம்பன் திருமலை நான்மிதி
யேன் என்று தாள் இரண்டும்
உம்பர் மிசைத்தலை யால்நடந்
தேற உமைநகலும்
செம்பொன் உருவன் ''என் அம்மை''
எனப்பெற் றவள் செழுந்தேன்
கொம்பின் உருகாரைக் காலினின்
மேய குலதனமே''[2]

என்று நம்பியாண்டார் நம்பியாலும் குறிப்பிடப்படுகின்றார்.

2.1.1. வாழ்வும் பணியும்

பெரிய புராணத்தில் இருபத்து நான்காவது அடியார் வரலாறாக, திருநின்ற சருக்கத்துள் அறுபத்தைந்து பாடல்களில் காரைக்காலம்மையாரின் வரலாறு விவரிக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் என்னும் நகரில் வாழ்ந்த 'தனதத்தனார்' என்னும் வணிகத் தலைவர்க்குத் திருமகள் போன்ற அழகுடைய காரைக்கால் அம்மையார் மகனாகப் பிறந்தார். இவர்க்குப் பெற்றோர் இட்ட பெயர் 'புனிதவதி' என்பதாகும்.

அம்மையார் இளமைப் பருவந் தொட்டே சிவபெருமான் திருவடிகளில் அடிமைப் பங்குபெறும், பேரன்பு கொண்டவராயிருந்தார். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய், வளர்ந்து வந்த அம்மையாருக்கு மணப் பருவம் வந்தது. மயில் போன்ற சாயலை உடைய அம்மையாருக்குக் காளை போன்ற 'பரமதத்தன்' என்பவர் கணவராக வாய்க்கப் பெற்றார். இல்லறவாழ்வில் இருவரும் கூடி மகிழ்ந்திருக்கின்றனர். புனிதவதியார் இல்லற வாழ்வில் தன்னை ஆட்படுத்திக் கொண்டதோடு, சிவபெருமானிடத்தும் பக்தி குறையாது ஒழுகி வந்தார். சிவனடியார்களைக் கண்டால் அவர்களைச் சிவனாகவே கருதி, இல்லத்திற்கு வரவேற்று, திருவமுது படைத்து, பொன், மணி முதலியன கொடுத்து மகிழ்ந்து வந்தார்.

இவ்வாறு அம்மையார் நல்வாழ்வு வாழுங்காலத்து ஒருநாள் பரமதத்தனார் இரு மாங்கனிகளைத் தான் வேலைசெய்யும் இடத்திலிருந்து வீட்டிற்குத் தன் உணவிற்காகக் கொடுத்தனுப்பினார். இந்த நேரத்தில் பசியுடன் அடியார் ஒருவர் புனிதவதியார் இல்லத்திற்கு வந்தார். அவரின் பசியைப் போக்க புனிதவதியார் கறியமுது கைகூடா வண்ணத்தால் மாம்பழம் கொண்டு திருவமுது செய்வித்தார். அடியார் மாம்பழத்தோடு அம்மையாரின் அன்புங்கூட உணவுண்டு பசியாறிச் சென்றார்.

பின்னர் பரமதத்தனார் உணவுண்ண வீட்டிற்கு வந்தார். மனைவி படைத்த உணவோடு மாம்பழத்தையும் விரும்பி உண்டார். மாம்பழச்சுவை கருதி "மற்றொரு மாம்பழமும் வேண்டும்" என்றார். அடியார்க்கு ஒரு பழத்தை அளித்துவிட்ட அம்மையார் வீட்டின் ஒரு பக்கத்தில் நின்று செய்வது அறியாது திகைத்து இறைவனை எண்ணினார். இறைவன் அருளால் அம்மையாரின் கையில் 'அதிமதுரக்கனி' ஒன்று கிடைத்தது. பின் அதனைக் கணவர்க்குப் பரிமாறினார். இப்பழத்தைச் சுவைத்த

பரமதத்தர் 'இப்பழம் முன்னைப் பழத்தைவிடச் சுவை மிக்குளதே? என்றும், இதை நீ பெற்றது எங்ஙனம்?' என்றும் வினவினார். கற்புக்கடம் பூண்ட அம்மையார் கணவனின் உயிரைக் காக்க வேண்டி முன் நிகழ்ந்தவை எல்லாவற்றையும் கூறினார்.

'ஈசன் அருளால் கிடைத்தது' என்ற சொல் கேட்ட பரமதத்தனார் இது உண்மையாக வேண்டுமானால் இன்னொரு பழத்தை இறைவனிடமிருந்து பெறுக என்றார். அம்மையாரும் தன்சொல் மெய்யாக வேண்டி, இறைவனிடம் வேண்டி பழம் பெற்றுக் கணவனிடம் கொடுத்தார். இரண்டாவதாகப் பெற்ற பழம் கணவன் கையில் சென்றடைந்தவுடன் மறைந்தது. இச்செய்கையால் பரமதத்தனார் அம்மையாரைத் தெய்வமென்றெண்ணி அம்மையாரோடு அதுமுதல் தொடர்பின்றி வாழ்ந்து வந்தார்.

பின்னொருநாள் பரமதத்தனார் பெருஞ்செல்வம் ஈட்டி வருவேன் எனக்கூறி, கடலில் கப்பல் செலுத்திப் பிறிதொரு நாடு சென்றடைந்தார். சிலகாலம் அங்கு தங்கி, பின் பாண்டிய நாடு சென்று, அங்கொரு வணிகமகளைக் கரம்பிடித்து ஒரு பெண்மகவுக்குத் தந்தையானார். இப்பெண் மகவைப் 'புனிதவதி' என்று தன் முதல் மனைவியின் பெயரிட்டழைத்தார்.

கணவரின் பிரிவால் வாடிய அம்மையார், சுற்றத்தாரின் வேண்டுகோளின்படி கணவனைச் சந்திக்கப் பாண்டிய நாட்டிற்குச் சென்றார். அங்கு அவரைப் பரமதத்தனார் தன் குடும்பத்தோடு பணிந்து வணங்கினார்.

புனிதவதியார் தான் வணங்கி, வழிபடுதற்குரிய கணவர் தன்னை வணங்கிய காரணத்தால் தன் தசை உடம்பை வெறுத்துப் பேய் வடிவத்தை இறைவனிடம் இறைஞ்சிப் பெற்றார். பின் கயிலை நோக்கித் தலையாலே நடந்துசென்று, இறைவனாலே அம்மை என்றழைக்கப் பெற்றுச் சிறந்தார். இறைவனிடம் 'உன் ஆடல் கண்டு கொண்டே இருக்கவேண்டும்' என வேண்டி 'திருவாலங்காட்டில்' பேய் வடிவில் இறைவன் ஆடல் கண்டவாறே முக்தி பெற்றார்.

இறையடியார்க்கு உணவிட்டு அன்பு செய்தமையினாலே சிறப்புப் பெற்ற இவரை 'மணிவேடத்தாரை வழிபட்டரனை அடைந்தோர்'3 எனச் சிறப்பிக்கின்றது சேக்கிழார் புராணம்.

இவர் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகம் போன்றன பாடினமையால் 'கற்கும் இயல் இசைவல்லோர்'4 எனவும் சேக்கிழார் புராணம் குறிப்பிடுகின்றது.

2.1.2. தெய்வம் - பேய் - அம்மை

காரைக்கால் அம்மையாரின் வாழ்நிலையுள் தெய்வம் - பேய் அம்மை என்ற மூன்று நிலைகளும் திருப்புமுனை நிலைக்களன்களாகும்.

2.1.2 : 1. தெய்வம்

காரைக்கால் அம்மையார், மாம்பழத்தினை இறைவனிடம் கேட்டுப் பெற்ற தெய்வச் செயலால், கணவனாலேயே தெய்வம் என்றழைக்கப்படுகின்றார்.

> ''வணிகனும் தன்கைப் புக்க மாங்கனி பின்னைக் காணான்,
> தனிவரும் பயமேற் கொள்ள உள்ளமுந் தடுமா றெய்தி
> அணிகுழ லவரை வேறோர் அணங்கெனக் கருதி நீங்கும்[5]
> என்றும்,
> 'மானுடம் இவர்தாம் அல்லார் நற்பெருந் தெய்வம் ஆதல்'[6]
> என்றும்''

பரமதத்தனார் அம்மையாரைத் தெய்வம் எனக் காண்கின்றார். அம்மையாரின் இறையன்பும், இவர் வாழ்வில் சிவன் நிகழ்த்திய அற்புதச் செயலும் இதன்மூலம் வெளிப்பட்டாலுங்கூட, சேக்கிழார் இதனை அம்மையாரின் பெருமைக்கு முதல்படியாகக் கருதுகின்றார்.

2.1.2 : 2. பேய்

> ''கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள''[7]

என்று பெண்ணிடம் துய்க்கும் இன்பத்தின் சிறப்பை வள்ளுவர் கூறுகின்றார். ஐம்புலன்களும் ஒருசேர நுகர்ந்து இன்புறுதற்குரிய மனைவியின் உடல் கணவனாலேயே வணங்குதற்குரிய பொருளாக மாறிய நிலை காரைக்கால்வாழ்வில் நிகழ்கின்றது. இதனால் அம்மையார் தசை அழுக்குச் சேர்ந்த உடம்பினை வெறுத்தார்.

"இனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழிந்துங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடிவு அடியே னுக்குப்
பாங்குற வேண்டும்"[8]

என்று இறைவனிடம் பேய்வடிவினைக் கேட்டுப் பெறுகின்றார்.

மனிதர் எவரும் மனித உடல்விட்டுப் பேய்வடிவு காண முனைதல் இல்லை. ஆனால் அம்மையார் ஏற்கத் துணிவது அவர்தம் மனத் திண்மையைக் காட்டுகிறது. "உலகெலாம் பேய் என வெருண்டு ஓடினும், இறைவன் என்னை அறிவாராகில் அதுவே சாலும். உண்மை அறியா மக்களுக்கு நான் எவ்வுரு எடுத்தாலும் அதனால் ஆவது என்னை?" எனக் கருதிய இவரின் செயல் இரண்டாம் படிநிலையாகும். அம்மையார் தன் உருமாறிய தன்மையினை' காரைக்கால் பேய்' எனத் தன் திருப்பதிகங்களில் இறுதிப் பாடல்களில் குறிப்பிட்டுக் காட்டிக் கொள்கிறார்.

2.1.2.3 அம்மை

காரைக்கால் அம்மையார் வாழ்வில் அமைந்துள்ள மூன்று படிநிலைகளுள் தலைமை சார்ந்தது இந்நிலையாகும்.

இறைவன் தங்கியுள்ள கயிலாயமலைமீது கால்படல் பாவமெனக் கருதி, காலால் நடவாது, அம்மையார், தலையாலேயே மலையின் மீது ஏறிக் கொண்டிருக்கிறார். இக்காட்சியைக் கண்ட உமையம்மை,

"தலையினால் நடந்திங் கேறும்
எம்பெரு மானோர் எற்பின் யாக்கை அன் பென்ன?"[10]

என வியந்து இறைவனை நோக்கி நின்றாள். இறைவன் "வருமிவள் எம்மைப் பேணும் அம்மை காண்"[11] எனக் கூறுகின்றார். இவ்வாறு அடியார்க்கு அன்னைபோல் உணவிட்ட அம்மையார் தமது அரிய செயலால் இறைவனுக்கே அம்மையாகிப் பெருமை பெறுகின்றார்.

1.2 : 4. எது சிறந்தது

காரைக்கால் அம்மையாரின் தெய்வம், பேய், அம்மை என்ற மூநிலைகளில் சிறப்புடைத்து எது? எனும் வினாவினுக்கு விடைகூறும் விதமாகச் சேக்கிழாரும்,

''மடுத்தபுனல் வேணியினார் அம்மை'' என மதுரமொழி
கொடுத்தாளப் பெற்றோரைக் குலவியதாண்ட வத்தில் அவர்
எடுத்தருளும் சேவடிக்கீழ் என்றும் இருக்கின்றாரை
அடுத்த பெருஞ் சீர்பரவல் ஆரள வாயினதம்மா''[12]

என்று பாடுகின்றார். இப்பாடலின்படி அம்மை என மடுத்தபுனல் வேலியினார் தன்னால் அழைக்கப் பெற்றமையே பெருஞ்சிறப்பிற்குரியது எனச் சேக்கிழார் கருதியுள்ளமை புலனாகின்றது. இக்கருத்தினை வலியுறுத்தும் வண்ணம் திருத் தொண்டர் புராண சாரம்,

''முடிநடையாலேறி 'யம்மையே' யெனநாத 'னப்பா' வென்று
பொங்குடை கயிலை பணிந்து''[13]

எனக் குறிப்பிடுவது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

2.2. மங்கையர்க்கரசியார்

இந்நாயன்மார்,

''வரிவளையான் மாணிக்கு நேசனுக்கும் அடியேன்''14
எனச் சுந்தரராலும்,

''பூசல் அயில்தென்ன னார்க்கன
லாகப் பொறாமையினால்
வாச மலர்க்குழல் பாண்டிமா
தேவியம்மானி கண்டீர்
தேசம் விளங்கத் தமிழா
கரர்க்கறி வித்தவரால்
நாசம் விளைத்தாள் அருகந்
தருக்குத்தென் னாட்டகத்தே''[15]

என நம்பியாண்டார் நம்பியாலும் குறிப்பிடப்படுகின்றார்.

2.2.1 வாழ்வும் பணியும்

2.2.1.1 மங்கையர்க்கரசியம்மையார் புராணத்துள் அறியப்படுவன

பெரிய புராணத்துள் தொகை அடியார்களும், தனியடியார்களும் இணைந்த தொகையின்படி அறுபத்தாராவது

அடியவர் வரலாறாக, மன்னியசீர் சருக்கத்துள் மங்கையர்க்கரசியார் வரலாறு மூன்று பாடல்களால் சித்தரிக்கப் பெற்றுள்ளது.

சேக்கிழார் இவரை 'மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்''[16] என அறிமுகப்படுத்துகின்றார். இவர் சோழர் குலத்தில் கொழுந்து போன்று உதித்து, பாண்டிய நாட்டிற்கு இல்லறம் புரிய வந்து, பாண்டி நாட்டுக்கு நேர்ந்த பழியினைத் தீர்த்த தெய்வத்தன்மை உடைய பாவையாவார். மேலும் தமிழ்நாட்டிற்கு வந்த இடரைச் சீர்காழித் தலைவரது அருளினாலே நீக்கித் திருநீற்றின் புகழைப் பரவச் செய்த மேன்மையர் ஆவார். சீர்காழித் தலைவராலே 'மங்கையர்க்கரசி'[17] 'மானினேர் விழி'[18] என்று பதிகங்களுள் வைத்துப் பாடப்பட்டவர். நின்றசீர் நெடுமாறனது சைவத்திறத்திற்கு நீண்டகாலம் உறுதுணையாக நிலை பெற்றிருந்து, கணவனோடு இறைவன் திருவடிக்கு ஆட்பட்டவர். சேக்கிழார் புராணம் இவரைக் 'குருவருளால் முக்தியடைந்தவர்'[19] என்ற வரிசையில் வைத்துக் காண்கிறது. இவர் ஞானசம்பந்தர் மேல் கொண்டிருந்த தாயன்பினைச் சிவப்பிரகாசர்,

> ''இலைபடர்ந்த பொய்கை யிடத்தமுதல் கண்டு
> முலைசுரந்த அன்னையோ முன்னின் - நிலைவிளம்பக்
> கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தர்
> இங்குயர்ந்தாள் ஆர்சொல் எனக்கு''[20]

எனச் சிறப்பித்துப் பாடுகின்றார். திருஞான சம்பந்தருக்கு அமைந்த தாயர் மூவர். ஒருவர் பெற்றெடுத்த பகவதி அம்மையார், பொய்கைக் கரையில் அழுதபோது பாலூட்டிய உமையம்மை மற்றொருவர், சம்பந்தர் அழுததைக் கேள்விப்பட்டவுடன் பால்சுரந்த பாண்டி மாதேவியாகிய மங்கையர்க்கரசியார் மூன்றாமவர். இவர்கள் மூவருள் அன்புத் தாயாகவும் அருள்தாயாகவும் விளங்கியவர் மங்கையர்க்கரசியாரே என அவரைப் பெருமைப்படுத்திச் சிவப்பிரகாசர் முடித்திருப்பது இவருக்கு இன்னொரு சிறப்பாகும். பாண்டி மாதேவிக்குப் பால் சுரந்த இவ்வரலாற்றைத் திருக்களிற்றுப் படியாரும்,

''சுரந்த திருமுலைக்கே துய்யதிரு ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு''[21]

எனக் குறிப்பிடுகின்றது. இந்நிகழ்ச்சி பற்றிய குறிப்பு பெரியபுராணத்தில் இடம் பெறவில்லை.

2.2.1.2. திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்துள் அறியப்படுவன

திருஞான சம்பந்த சுவாமிகள் புராணத்தில், இவரது முழுமையான செயல்திறம் அறியப்படுகின்றது. பாண்டிய நாட்டை நின்றசீர் நெடுமாறன் என்ற மன்னன் ஆண்டபோது அந்நாட்டில் சமணர் ஆதிக்கம் மிக்கிருந்தது. சமணர் ஆதிக்கம் ஒழிந்து, சைவநெறி பாண்டிய நாட்டில் தழைத்திட அம்மன்னனின் மனைவி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் முயன்றனர்.

இவ்விருவரும் திருமறைக்காட்டிற்கு ஞானசம்பந்தர் வருகை புரிந்த போது - பாண்டிநாட்டில் நடைபெறும் சமணர் ஆதிக்கத்தை ஒழித்து, சிவநெறி நாட்ட வரவேண்டும் எனப் பரிசனங்களின் மூலம் செய்தி விடுத்தனர். சம்பந்தரும் அதனை ஏற்றுப் பாண்டி நாட்டிற்கு வருகை புரிந்தார். அவரை ''யானும் என்பதியும் செய்த மாதவம் தான் என்னே''[22] என மங்கையர்க்கரசியார் வரவேற்றார். அவர் திருமடத்தில் தங்க ஏற்பாடு செய்தார்.

பொறாமை மிக்க சமணர் - சம்பந்தர் இருந்த மடத்திற்குத் தீ வைத்தனர். இத் தீ நிகழ்வைப் போக்கி , சமணரின் சூழ்ச்சி, ''பையவே சென்று பாண்டியர்க்காக'' என சம்பந்தர் திசை திருப்ப, அஃது பாண்டியனுக்குச் சூலை நோயைத் தந்தது. பாண்டியனுக்கேற்பட்ட சூலை நோயைத் தீர்க்க, சமணர் எவ்வளவு முயன்றும் முடியாததால், அரசியாரும், அமைச்சரும் சம்பந்தரை அழைத்துவர ஏற்பாடு செய்தனர். சம்பந்தரும் திருநீரெடுத்து, வல, இட பக்கநோய்களைச் சமணர்க்கெதிராக தீர்த்தார். சமணர்களை அனல் புனல் வாதுகளில் வென்றார். சமணர்கள் கழுவேறினர். இவ்வாறு சம்பந்தர் வரலாற்றில் மங்கையர்க்கரசியாரின் செயல்கள்

தொகுத்து உரைக்கப்பட்டுள்ளன.

2.2.2. வரவேற்பும் - பாடல்பெறலும் - சைவநெறி தழைக்கச்செய்தலும்

மங்கையர்க்கரசியாரின் வாழ்நிலையில், சமணர் ஆதிக்கத்திலிருந்த மதுரைக்கு ஞான சம்பந்தரை வரவேற்றலும், அவர் வாயால் பாடல் பெறலும், சைவநெறி தழைக்கத் தான் வாழ்ந்ததோடு, தன் கணவனும், தன் நாடும் சைவ நெறி நின்று வாழ வழிவகை செய்தலும் பெருமை மிகு செயல்கள் ஆகும். இம்மூன்றனுள் சைவநெறி தழைக்கச் செய்தநிலை மிகச் சிறப்பிற்குரியது, எனச் சேக்கிழார் கருதுகின்றார்.

''வருநாளென் றும்பிழையாத் தெய்வப் பொன்னி
வளம் பெருக்க வளவர்குலம் பெருக்குந் தங்கள்
திருநாடு போற்செழியர் தென்னர்நாடு
சீர்விளங்கும் செய்யசீ ரடிகள் போற்றி''[23]

என்று சேக்கிழார் பாடுவதும்,

''மன்னர் சூழ் தென்னவர்க்கு மாதேவியார், மன்
சங்கை கெட வமன்சமயஞ் சாட வல்ல
சைவசிகா மணிஞானத் தமிழிற் கோத்த
பொங்குதிரு வருளுடைய போத வல்லி''[24]

என்று திருத்தொண்டர் புராண சாரம் குறிப்பிடுவதும் இக்கருத்துக்கு வலுசேர்ப்பனவாகும்.

2.3. இசைஞானியார்

இவர் சேக்கிழாரின் வைப்புமுறையின்படி மூன்றாவது பெண் நாயன்மாராக நுவலப் பெறுகிறார். பெரியபுராணத்தில் எழுபத்தோராவது (தொகையடியாரும் தனியடியாரும் சேர்ந்த எண்ணிக்கை) அடியார் வரலாறாக இவரின் வரலாறு மன்னியசீர் சருக்கத்துள் ஒரு பாடலால் குறிப்பிடப்படுகின்றது.

''இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன்''[25] என்று சுந்தரராலும்,

''பயந்தாள் கறுவுடைச் செங்கண்வெள்
ளைப்பொள்ளல் நீள்பனைக்கைக்
கயந்தான் உதித்த நற்காளையை
என்றும் கபாலங்கைக்கொண்
டயந்தான் புகும் அரன் ஆரூர்ப்
புனித அரன் திருத்தாள்
நயந்தாள் தனதுள்ளத் தென்றும்
உரைப்பது ஞானியையே''[26]

என்று நம்பியாண்டார் நம்பியாலும் இசைஞானியார் குறிப்பிடப் படுகின்றார்.

2.3.1. வாழ்வும் பணியும்

குறைவில்லாத பெருமையினை உடைய 'சடையநாயனாரது' செல்வம் பொருந்திய மனைவியாரும், முப்புரம் அழித்தவரான சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட 'நம்பியாரூரைப்' பெற்றவரும் ஆன சிறப்பினை உடையவர்; சிவவேதியர் குலத்தவர் என்ற செய்திகள் இவருடைய புராணத்தில் அமைகின்றன.

உலகம் உய்ய நல்வழி சொன்ன சுந்தரரை, ஆலவாய் அண்ணலின் தோழரைப் பெற்றவர் என்ற பெருமையே இவருக்குச் சிறப்பாகும். இவரின் பெருமையைச் சேக்கிழார்,

''ஒழியாப் பெருமைச் சடையனார்
உரிமைச் செல்வத் திருமனையார்,
அழியாப் புரங்கள் எய்தழித்தார்
ஆண்ட நம்பி தனைப்பயந்தார்
இழியா குலத்தின் இசைஞானிப்
பிராட்டி யாரை''[27]

எனப்பாடுகின்றார்.

''யாவிற்றிகழ் தலைவன்வலிய வாண்ட ஆரூரர்
அவதரிக்க வருந்தவங்கள் புரிந்தார்''[28]

என் இவரைத் திருத்தொண்டர் புராணச்சாரம் புகழ்கின்றது.

இவ்வாறு காரைக்காலம்மையாரும், மங்கையர்க்கரசியாரும், இசைஞானியாரும் தம் வாழ்வில் சிவப்பணியே சிறப்பிற்குரியதெனச் செய்து, நாயன்மார் என்னும் அளவிற்கு உயர்கின்றார்.

2.4. முடிவுகள்

1. பெரியபுராணம் கூறும் தனியடியார்களில் இடம் பெற்றுள்ள மூன்று பெண்ணடியார்களின் வரலாறும் தனித்தனியாக எடுத்துக் காட்டப்பெற்று, .பெருமைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

2. காரைக்கால் அம்மையாரின் வாழ்நிலையில் இடம்பெற்ற தெய்வம், பேய், அம்மை என்ற மூன்று நிலைகளில் இறைவனுக்கு அம்மையான நிலையே சிறப்பிற்குரியதாகும்.

3. மங்கையர்க்கரசியாரின் வாழ்நிலையில் இடம்பெற்ற, மதுரைக்கு ஞானசம்பந்தரை வரவேற்றல், அவர்வாயால் பாடல்பெறல், சைவநெறி தழைக்கச் செய்தல் என்ற மூன்று நிலைகளில், சைவநெறி தழைக்கச் செய்த செயலே சிறப்பிற்கு உரியதாகும்.

4. இசைஞானியார் வாழ்வில், சடையனாயனாரது மனைவியார், நம்பியாரூரைப் பெற்றவர் என்ற இரு நிலைகள் அமைந்திருப்பினும், நம்பியாரூரைப் பெற்றதே இவரின் சிறப்பாகக் கருதப்படுகிறது.

குறிப்புகள்

1. 7ஆம் திருமுறை, தி.தொ.தொ. தருமையாதீனம், 1964, பா.4 : 2
2. 11ஆம் திருமுறை, தி.தொ.தி. திருப்பனந்தாள், 1963, பா.28
3. தி.தொ.பு.பின்னிணைப்பு, சே.பு. திருப்பனந்தாள், 1970, பா.45
4. மேற்படி, பா.46
5. பெ.பு.கா.அ.பு.பா. 31 : 1-3
6. மேற்படி, பா.47 : 1-2
7. திருக்.1101.
8. பெ.பு.கா.அ.பு. பா.49 : 1-3

9. 11ஆம் திருமுறை, திரு ஆலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள், பா.11
10. பெ.பு.கா.அ.பு.பா. 57 : 1-2
11. மேற்படி, பா.58 : 1
12. மேற்படி, பா.65
13. கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார், தி.தொ.பு.சா.பா. 28 : 3-4
14. தி.தொ.தொ.பா.11 : 1
15. தி.தொ.தி.பா.79
16. பெ.பு.ம.பு.பா.1
17. சம்பந்தர் தேவாரம், மங்கையர்க்கரசி பதிகம், திருப்பனந்தாள், 1961, பா.1
18. மேற்படி, மானினேர் விழி பதிகம், பா.1.
19. சே.பு.பா. 43 : 1
20. சிவப்பிரகாசர், நால்வர் நான்மணிமாலை, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், ஜுன் 1969, பா.5.
21. திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார், திருக்களிற்றுப்படியார், திருவாவடுதுறை ஆதீனம், 1951, பா.54.
22. திருஞான சம்பந்த மூர்த்திகள், பா.672 : 4
23. பெ.பு.ம.பு.பா. 3 : 1-3
24. தி.தொ.பு.சா.பா. 71 : 1-3
25. தி.தொ.தொ.பா. 11 : 3
26. தி.தொ.தி.பா. 85
27. பெ.பு. இசைஞானியார் பு.பா. 1 : 1-3.
28. தி.தொ.பு.சா.பா. 76 : 3.

3. காதல் மனைக்கிழத்தியர்

பெரிய புராணத்தில் பெண்மைநலம் என்ற எண்ணத்தில் இரண்டாம் இடம் பெறுகின்ற பெண்கள் செயற்கரும் செயல்கள் செய்த அடியார்களின் மனைவியர் ஆவர். அத்தகைய சிறப்புடைப் பெண்கள் இருபத்தியொருவர்★ ஆவர். அவர்களை மனைவியர் என்ற சிறப்பினர், கணவன் வழியே தன்வழி எனக் கொண்டோர், கணவன் செயலுக்கு வழிகாட்டினோர், கணவனின் வழியைக் கடிந்தோர், கணவனைத் தன் அருஞ்செயலால் விஞ்சியோர் என்ற ஐந்து நிலைகளில் சிறப்பித்துக் காண இயலும்.

3.1. மனைவியர் என்ற சிறப்பினர்

மெய்ப்பொருள் நாயனாரின் மனைவி, அமர்நீதி நாயனாரின் மனைவி, மானக்கஞ்சார நாயனாரின் மனைவி, நமிநந்தி நாயனாரின் மனைவி, ஞானசம்பந்தரின் மனைவி, கோட்புலி நாயனாரின் மனைவி, திருநீலகண்ட யாழ்ப்பான நாயனாரின் மனைவி ஆகிய எழுவர் இப்பிரிவிற்கு உரியோர் ஆவர்.

சேக்கிழார் இவர்களனைவருக்கும் (திருநீலகண்ட யாழ்ப்பாணரின் மனைவி தவிர) பெயர் குறிப்பிடவில்லை. இவர்கள் தத்தம் செயல்களால் பெருமை பெறாது, நாயன்மார்களில் மனைவியர் என்ற அளவிலேயே சிறப்புப் பெறுகின்றனர். இவர்களுக்கெனத் தனித்த செயல் பெருமைகள் ஏதுமில்லை.

3.1.1. மெய்ப்பொருள் நாயனாரின் மனைவி

திருக்கோவிலூரைத் தலைநகராகக் கொண்டு சேதிநாட்டினை ஆண்ட மன்னர், சைவ அடியார்களின் திருவேடத்தையே மெய்ப்பொருள் எனக் கருதி வழிப்பட்டமையால் மக்களால் ''மெய்ப்பொருளார்'' என அழைக்கப்பட்டார். இவரின்மேல் 'முத்தநாதன்' என்பான் பகைமை கொண்டு இவர் நாட்டின்மீது பலமுறை போர்தொடுத்துத் தோற்றான். இவரைப் போரில் வெல்லமுடியாத அவன், வஞ்சனையால் வெல்லக் கருதிப் பொய்ம்மையாக அடியார் வேடம் பூண்டு, மன்னவர்க்கு

மெய்ப்பொருள் அறிவிக்க வந்ததாகச் சொல்லி மெய்ப்பொருளாரை உடைவாளால் கொன்று விடுகின்றான். ஆனால் மெய்ப்பொருளார் இவன் வேடத்தையும் மெய்ப்பொருளாகக் கருதி, அவனை எவ்வித இடையூறுமின்றி அவன் நாட்டிற்குச் செல்ல வழிவகுக்கின்றார். இவரின் மனைவி பற்றிய குறிப்பு பெரியபுராணத்தில்,

''புரவலன் துயிலமாடே, மன்றலங்குழல் மென்சாயல் மாதேவி இருப்பக் கண்டான்''[1]

என்று முத்தநாதன் கண்டதாகக் கூறும் பாடல் மூலம் வெளிப்படுகின்றது. வந்த அடியவர் மெய்ப்பொருள் உறுதியைத் தன் கணவருக்கு அறிவிக்க வேண்டி, கணவனும் தானும் மட்டும் இருந்த பள்ளியறையை விட்டு வெளிவந்த செயல் ஒன்றே இவருடையதாகும்.

3.1.2. அமர்நீதி நாயனாரின் மனைவி

பழையாறை என்னும் பதியில் வாழ்ந்த அமர்நீதியார், சிவனடியார்களுக்குக் கந்தையும், கீளும், கோவணமும் அளிக்கும் தொண்டினை நாள்தோறும் செய்து வந்தார். சிவபெருமான் இவரைச் சோதிக்க வேண்டி கோவணதாரியாக வந்தார். வந்தவர் கோவணம் ஒன்றை அமர்நீதியாரிடம் கொடுத்துப் பாதுகாக்கச் சொல்லி விட்டு குளிக்கச் சென்றார். கொடுத்த கோவணம் மறைந்து போக, அக்கோவணத்திற்கீடாக, தன் செல்வங்களையும், மனைவி மக்களையும், தன்னையும் அர்ப்பணித்துக் கொண்ட பெருமையர் அமர்நீதியார் ஆவார்.

''புனைம லர்க்குழல் மனைவியார் தம்மொடு புதல்வன்
தனையு டன்கொடு தனித்துலை வலங்கொண்டு''[2]

என்று அமர்நீதியார் மற்றொரு கோவணத்திற்கு ஈடாகத் தராசுத்தட்டில் தன் மனைவி மக்களோடு நிற்கின்றார். இவ்வரலாற்றில் தன் கணவன் எண்ணப்படி துலாக்கோலில் நின்ற பெருமை மட்டுமே இவருடைய செயலாக அமைந்துள்ளது.

3.1.3. மானக்கஞ்சார நாயனாரின் மனைவி

மானக்கஞ்சாரனார் தன் மகளின் கூந்தலையே அடியவர்க்கு

அரிந்து கொடுத்த அருள் நெஞ்சத்தினர். இவரின் மனைவி, பிறவிக் கொடுஞ்சூழல், பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார் என்ற அளவிலேயே பெரியபுராணத்தில் சுட்டப்படுகின்றார்.

சேக்கிழார் இவரின் பெருஞ்சிறப்பைக் குறிப்பிடும்போது,

> ''தெய்வந் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை''[3]

என்ற குறள் நெறிக்கேற்ப, ''மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக்கிழத்தியார்''[4] எனக் குறிப்பிடுகின்றார். இவரின் பெயர் சேக்கிழாரால் கூறப்படாவிடினும், 'கல்யாணசுந்தரி'[5] எனத் தலபுராணம் குறிக்கின்றது. இவ்வம்மையாரின் மகள் ஏயர்கோன் கலிக்காமரின் மனைவியாக ஆனவர் என்பது குறிப்பிடத்தக்கது.

3.1.4. நமிநந்தி நாயனாரின் மனைவி

நமிநந்தியாரின் மனைவியை,''இல்லத்து முழுதும் தருமம்புரி மனையார்''[6]

சேக்கிழார் குறிப்பிடுகின்றார். திருமணலி சென்று மீண்ட கணவரிடம் 'சிவபூசை முடித்து, அமுதுண்டு பள்ளி கொள்வீர்' என்று சொன்ன செயல் ஒன்றே இவருடையதாகும். இறைவன், கனவில் தோன்றிய அருஞ்செயலைக் கணவர் கூறக்கேட்டு மகிழ்ந்தவர்.

3.1.5. ஞானசம்பந்தரின் மனைவி

''அவர் நடத்தியது சமய இயக்கம் மட்டும் அன்று, தமிழ் இயக்கம். அவர் சமய தத்துவங்களைப் பரப்பினார் என்பதைவிடத் தமிழ்மக்கள் வாழ்க்கை மரபுகளையும், பண்பாட்டையும், மொழியையும், புறநெறிகளால் சிதைந்து உருமாறாத வண்ணம் பாதுகாத்தார் என்று கருதுவதே பொருத்தமாகும்''[7] என்ற கருத்தின்படி தமிழ்ப்பண்பாட்டை வளர்த்தவர் ஞானசம்பந்தர். அவர் தன் வாழ்வின் இறுதியில் நம்பியாண்டார் நம்பியின் மகளாரை மனைவியாக ஏற்றுக் கொண்டு இறையொளியில் கலந்த

பெருமையை உடையவர். மணவீட்டில் மனைவியோடு இருந்த சம்பந்தர் தோற்றத்தை 'வெண்மேகத்தோடு பொருந்தும் மின்னல் கொடு' என்ற சேக்கிழார் உவமிக்கின்றார். எனவே இவரின் மனைவி மின்னலை ஒத்த அழகினர் எனக் கொள்ளலாம்.

''காதலியைக் கைப்பற்றிக் கொண்டுதவஞ் செய்தருளித்
தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியதன் உட்புகுவார்''[3]

எனவே தன் கணவரோடு ஒளியில் கலந்த பெருமை ஒன்றே சம்பந்தர் மனைவிக்கு உரியதாகும்.

3.1.6. கோட்புலி நாயனாரின் மனைவி

கணவன் சேர்த்து வைத்துச் சென்ற சிவ திரவியத்தை உண்டமையினாலே கணவராலேயே வாளால் துணிக்கப்பட்டு இறையருளையடைந்தவர் கோட்புலி நாயனாரின் மனைவியாவார். இந்த அளவில் மட்டுமே இவர் அறிமுகம் ஆகின்றார்.

''தந்தையார் தாயார்மற் றுடன்பிறந்தார் தாரங்கள்
பந்தமார் சுற்றத்தார் பதியடியார் மதியணியும்
எந்தையார் திருப்படிமற் றுண்ணஇசைந் தார்களையும்
சித்தவாள் கொடுதுணிந்தார் தீயவினைப் பவந்துணிப்பவர்''[9]

என்பதனால் நாயனார்க்கு மனைவியார் இருந்தமை அறியப்படுகின்றது. தந்தையார், தாயார் என்ற வரிசைப்படி 'தாரங்கள்' என்ற சொல்லும் இடம் பெறுகிறது. 'தாரங்கள்' என்ற இச்சொல்லின் மூலம் சேக்கிழார், கோட்புலியார் மனைவியாரையும், மற்றுடன் பிறந்தார் துணைவியார்களையும் சுட்டியிருப்பதாகக் கருதலாம்.

3.1.7. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரின் மனைவி

திருநீலகண்ட யாழ்ப்பாணர் சிவப்புகழை யாழில் இட்டுப்பாடும் பெருமைக்குரியவர். சிவனருளால் பொற்பலகை

பெற்று அதிலேறி யாழ் வாசித்தவர். இவர் மனைவியின் பெயர் 'மதங்கசூளாமணி'. திருஞானசம்பந்தரின் திருமணத்தில் இவ்விருவரும் சிவப்பேரொளியில் கலந்தனர். 'திருநீலகண்டத்துப் பெரும்பாணர் தெள்ளமுதில் வருநீர்மை இசைப்பாட்டு மதங்க சூளாமணியார்'[10] எனச் சேக்கிழாரால் குறிப்பிடப்படுகின்றார். இத்தகைய செயலுக்குரியவராக மட்டும் இவர்தம் பெருமை வெளிப்படுத்தப்படுகிறது.

இவ்வெழுவரும் நாயன்மார் என்ற முறையில் மட்டும் சிறப்புப் பெறுகின்றனர்.

3.2. கணவன் வழியே தன்வழி எனக்கொண்டோர்

பெண்ணின் பெருமையை

''தற்காத்துதித் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'[11]

எனத் திருக்குறள் கூறுகிறது. 'தற்கொண்டான் பேணி' என்பதற்கு, தன்பக்தாவின் குணத்தையும் பேணி' என்று பரிதியார் உரைவகுக்கிறார். எனவே பக்தாவின் குணம் பேணல் பெண்களுக்குச் சிறப்பாகின்றது.

''வினையே ஆடவர்க்குயிரே
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே''[12]

என்ற சங்க இலக்கிய நெறியின்படியும், ''கொழுநன் தொழுதெழுவாள்''[13] என்ற குறள்நெறியின் படியும், பெரிய புராணத்துப் பெண்கள் கணவன் வழியையே தன்வழி எனக்கொண்டு சிறப்புப் பெறுகின்றார்கள். இவ்வழியில் இயற்பகை நாயனார், இளையான்குடி மாற நாயனார், சிறுத்தொண்ட நாயனார். கலிக்கம்பநாயனார், கலியநாயனார், கழற்சிங்க நாயனார் ஆகிய அறுவரின் மனைவியரையும் காணலாம்.

3.2.1. இயற்பகை நாயனார் மனைவி

இவரின் பெயர் அறியப்பட முடியவில்லை. 'திருவினும் பெரியாள்'[14] எனச் சேக்கிழார் போற்றுவார்.

காவிரிப்பூம்பட்டிணத்தில் வணிகர்மரபில் தோன்றியவர் இயற்பகை நாயனார். இவர் இல்லை என்னாதே வழங்கும் இயல்பினர். இவரின் பெருமையை உலகிற்குக் காட்ட எண்ணிச் சிவபெருமான், தூர்த்த வேடம் பூண்டு வந்து அவரிடம் அவரின் மனைவியைக் கேட்கின்றார். இல்லையே என்னாத இயற்பகையார் அடியவர் கேட்ட பொருளைக் கொடுத்து விடுகின்றார். கொடுத்த செய்தியை அறிந்த மனைவியார்,

''இன்று நீரெனக் கருள் செய்த திதுவேல்
என்னுயிர்க் கொருநாத! நீர்உரைத்த
தொன்றை நான்செயும் அத்தனையல்லால்
உரிமை வேறுளதோ எனக்கு''[15]

என மொழிகின்றார்.

இயற்பகையார் தன்னைக் கொடுத்த நிலை அவர் மனைவியார்க்கு உடன்பாடில்லை; ஆனாலும் உரிமைப்பொருள் என்ற நிலையில் தூர்த்தருடன் செல்ல இசைகின்றார். உரிமைப் பொருள் என்பது, அதற்கென விருப்பமின்றி அதற்குடையோன் விருப்பப்படி நடக்கிற தன்மை கொண்டதாகும். அவ்வகையாலேயே இவ்வம்மையாரும் கணவன் விருப்பப்படியே நடக்கின்றார். இவர் தம் கற்பின் மேம்பாட்டைச் சேக்கிழார் 'என் உயிர்க்கு ஒரு நாத' என்ற ஒரு சொல்லின் மூலம் குறிப்பிட்டு விடுகின்றார். இவர் தன் கணவனே, பிறர் ஒருவருக்குத் தன்னை உடைமையாக்கியபின் தன்னை ஓர் உணர்வற்ற பொருளாகக் கருதிக் கொண்டு செயல்படுகின்றார். உடமைப் பொருளுக்கும், அடிமைப் பொருளுக்கும் தந்தை, தாய், கணவன் என்ற உறவெல்லாம் கிடையாது. இது கருதியே அம்மையாரும் கணவன் என்ற உறவைக்கடந்து, கணவனார் பெயர் மனைவியாரால் கூறப்படல் இல்லை என்ற மரபுமீறி, 'இயற்பகை வெல்லும்' எனக் கூறுகின்றார். எனவே இயற்பகையாரின் மனைவியார், கணவன் தன்னையே, பிறர் ஒருவர்க்குக் கொடுப்பினும், கணவன் வழியே தன்வழி எனக் கொண்டு வாழ்ந்த பெண்மையார் ஆகின்றார்.

3.2.2. இளையான்குடி மாறநாயனாரின் மனைவி

இவரின் பெயர் அறியமுடியவில்லை. இவர்

இளையான்குடியில் வாழ்ந்த மாறன் என்ற நாயன்மாரின் மனைவியார் ஆவார். மாறனார் நாள்தோறும் அடியவர்க்கு விருந்து படைக்கும் இயல்பினர். ஓரளவு செல்வத்தினர். செல்வம், விருந்து படைக்கும் இயல்பால் கரைந்து போகின்றது. இறைவன் இவர்களைச் சோதிக்க, மழைக்காலத்து நாளொன்றில், பசிமிக்க சிவனடியாராக வேடம்பூண்டு வந்து உணவுவேண்டி இவர்கள் வீட்டின்முன் நிற்கின்றார். தமக்கே உணவிலாது இருந்த மாறனார், அடியவர்க்கு அமுதூட்ட எண்ணங்கொண்டு, செய்வதறியாது திகைத்தார். அந்நேரத்தில் நாயனாரின் மனைவியார்,

''செல்லல் நீங்கப் பகல்வித்திய செந்நெல்
மல்லல் நீர்முனை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமுதாக்கலும் ஆகும்''[16]

என்று அமுதுபெறும் வழியினைக் கூறுகின்றார். இவர் கூறியவண்ணம் செய்ய மாறனாரும் நள்ளிரவில் கூடையைத் தலையில் வைத்துக்கொண்டு, காலாலேயே வழியைக் கண்டு வயலை அடைகிறார். மழையினாலே நீர்மேல் மிதந்து கொண்டிருந்த நெல்முளைகளைக் கைகளாலே தடவி எடுத்துக் கூடையிலிட்டுத் தலையில் சுமந்து கொண்டு வீட்டிற்கு வந்தார். விறகிற்கு வீட்டின் கூரையை அறுத்துக் கொடுத்தார். குப்பைக் கீரைகளைக் கறிக்கு ஆகுமாறு எடுத்துவந்தார். இவரின் மனைவியார் நெல்லை வறுத்துச் சோறும், கறியும் செய்தார். இவை தயாரானதும் மாறனார் சிவனடியாரை அழைக்க, அப்போது ஆண்டவன் இவரின் அன்பு நெஞ்சம் எண்ணி உமாதேவியாருடன் காட்சிதந்து அருளினான். இப்பேறு மாறனாருக்கு மனைவியாரால் வாய்த்தது எனில் மிகையன்று.

3.2.3. சிறுத்தொண்ட நாயனாரின் மனைவி

இவரின் பெயர் திருவெண்காட்டு நங்கை என்பதாகும். இவரின் கணவர் பரஞ்சோதியார் என்ற சிறுத்தொண்டர் ஆவார். இவர்கள் இல்லறவாழ்வின் பயனாய்ச் சீராளதேவன் என்ற ஆண்மகவைப் பெறுகின்றார்கள். பரஞ்சோதியார் நாள்தோறும் அடியவர்க்கு உணவிட்ட பின் உண்ணும் இயல்பினர். ஒருநாள் எந்தவொரு அடியாரும் இவருக்குக் கிடைக்கவில்லை. அப்போது இவர்களைச்

சோதிக்க இறைவன் பயிரவ சங்கமராக வேடமேற்று, அடியவராக இவரின் வீட்டிற்கு வருகைபுரிந்தான்.

வந்த இறையடியார், ஒருகுடிக்கு, ஒருமகனாய், ஐந்து வயதினனாய், எவ்வித உறுப்புக் குறைவும் இலனாய் உள்ள பிள்ளையினைத் தாய் பிடித்துக் கொள்ளத் தந்தை அறிந்து கொடுக்கப்பெற்ற உணவினையே யான் ஏற்பேன் எனக் கூறினார். பரஞ்சோதியார் தன்மகனையே அவர் உணவிற்கு பயன்படுத்திக் கொள்ள எண்ணிட, வெண்காட்டு நங்கையும் மகிழ்வுடன் சம்மதிக்கின்றார்.

> ''பொருவில் பெருமைப் புத்திரன்மெய்த் தன்னை அளித்தான் எனப்பொலிந்து
> மருவு மகிழ்ச்சி எய்த அவர் மனைவி யாருங் கணவனார்
> அருமை உயிரை எனக்களித்தான் என்று மிகவும் அகமலர
> இருவர் மனமும் பேருவகை எய்தி அரிய வினை செய்தனர்''[17]

என்ற பாடலின் மூலம் கணவனாரின் செயலுக்கு ஒத்த மனப்பான்மை உடையவராக வெண்காட்டு நங்கை திகழ்கிறார் என்பதை அறியலாம். பிறபகுதியில், 'செய்யமணியே சீராளா வாராய், சிவனார் அடியார்யாம் உய்யும் வகையில் உடனுண்ண அழைக்கின்றார்''[18] எனப் பெற்றப் பிள்ளையைக் கணவரும் தானும் உய்ய அழைக்கின்றார். எனவே கணவன் விரும்பும் வண்ணம் பிள்ளையையே அமுதுபடைக்கச் சம்மதித்த இவர் செயல் போற்றற்குரிய வண்ணம் அமைந்துள்ளது. தாய் என்ற நிலையை விட மனைவி என்ற நிலையில் இவர் சிறந்து நிற்கிறார். ஆதலால் இவரை 'மனையறத்தின் வேர்'[19] என்று சேக்கிழார் அழைக்கின்றார்.

3.2.4. கலிக்கம்ப நாயனாரின் மனைவி

இவரின் பெயர் தெரிந்தில. பெண்ணாடகத்தில் இருந்த கலிக்கம்பர் நாள்தோறும் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்விப்பது வழக்கம். திருவமுது செய்விக்கும் முன் இவர் அடியார்களின் கால்களை நீரினால் விளக்குவார். இவரின்

மனைவியார் அடியார்களின் திருவடிக்கு நீர்வார்த்துக் கொண்டு வருவார்.

ஒருநாள் இவர்களிடம் முன்னாள் வேலைக்காரராக இருந்த பணியாளர் ஒருவர் அடியார் கூட்டத்தோடு வந்து நின்றிருந்தார். அம்மையார் இவரின் காலுக்கு நீர்வார்க்க வருகின்றபோது முன்பு ஏவல் செய்யாது அகன்ற பணியாள் என அறிந்து கொள்கின்றார். இவ்வாறு அவர் அறிவதற்குள் காலத்தாழ்வு ஏற்பட்டு விடுகின்றது. கலிக்கம்பர் இத்தாமதத்தை, ''இவள் இவ்வடியார் முன்பு இருந்த நிலைமையினை எண்ணி திருவடி விளக்க நீர்வாராது ஒழிந்தாள் போலும்'' என எண்ணி, வாளினை உருவி மனைவியின் கையினைத் துண்டித்து விடுகிறார்.

''நீர்வாராது ஒழிந்தாள் என்று மனங்கொண்டு
மறித்த நோக்கார் வடிவாளை வாங்கிக் கரகம் வாங்கிக்கை
தறித்துக் கரக நீரெடுத்துத் தாமே அவர்தாள் விளக்கினார்''[20]

கணவன் செய்த திருப்பணிக்குத் துணையாக நிற்பதோடு, காலத் தாழ்வால் செயல் செய்யத் தவறியபோது கணவரால் தண்டிக்கப்பட்டதையும் ஏற்றுக் கொண்ட இவ்வம்மையார் சிறப்புக்குரியவர்.

3.2.5. கலிய நாயனாரின் மனைவி

திருவொற்றியூரிலே வாழ்ந்த, கலிய நாயனார், கோயிலுக்கு விளக்கெறிக்கும் பணியினை இடையறாது செய்பவர். இவர் விளக்கெறிக்கப் பொருள் இல்லாதபோது தன் மனைவியையே விற்கத் துணிந்தார். இவர் மனைவியும் தான் விற்கப் படுவதற்கு காரணம், கணவன் இறைபணி தடை படாததற்காகவே என்பதை உணர்ந்து ஏற்றுக்கொண்டு தன் கணவர் எண்ணத்திற்கு இசைந்தார். இதனை,

''மனமகிழ்ந்து மனைவியார் தமைக்கொண்டு வளநகரில்
தனமளிப்பார் தமை எங்குங் கிடையாமல் தளர்வெய்தி
சினவிடையார் திருக்கோயில் திருவிளக்குப் பணிமுட்டக்
கனவினுமுன் பறியாதவர்''[21]

எனச் சேக்கிழார் கூறுவதால் தெளியலாம்.

3.2.6. கழற்சிங்க நாயனாரின் மனைவி

கணவரோடு கோயில் பல தரிசித்துக் கொண்டு வந்தபோது, திருவாரூரில் மூக்கினையும் கையினையும் இழந்தவர். திருவாரூர் கோயில், மாலைகட்டு மண்டபத்தில் அருகில் விழுந்திருந்த புதுப்பூவை நுகர, செருத்துணை நாயனார் என்பவரால், 'இறை பூ நுகர்ந்தது குற்றம்' என்ற பான்மையால் மூக்கறியப்பட்டார். இவரின் இச்செயலை அடியவர் மூலங்கேட்டு, கணவரான கழற்சிங்கர் எடுத்தகையை முதலில் வெட்டுதல் வேண்டும் என்றமையால் அவரால் கையும் இழந்தவர்.

''அக்கமழ் வாசப்பூத்
தொட்டுமுன் னெடுத்த கையாம் முற்படத் துணிப்ப தென்று
பட்டமும் அணிந்து காதல் பயில்பெருந் தேவியான
மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடும்
துணித்தாரன்றே''[22]

என்பதால் இதனை உணரலாம். பிறர் ஒருவரால் தன் மூக்கை இழந்ததோடு, தன் கணவரால் கைதுணிக்கப் படும்போது ஏதும் கூறாமல் கணவன் பணிக்கு உடன்பட்ட பெண்மையராய்ச் சிறப்பாய் விளங்குகிறார் இப்பெண்ணடியார்.

இவ்வறுவருள் இயற்பகையார், இளையான்குடி மாறனார் இருவரும் ஈசனாரை உமையோடு காணும்பேறு பெற்றவர் ஆவர். ஏனெனில் இவர்களுக்கு மனைவியார் செய்கையினாலே பெருமை என்பதனால் ஆகும். சிறுத்தொண்டருக்கு அவர் மனைவி, மகன், பெருமை கருதி உமையோடும், ஆறுமுகக் கடவுளோடும் சிவபெருமான் காட்சி தருகிறார். மற்ற மூவரான கலிக்கம்பர், கலியர், கழற்சிங்கர் ஆகியோர் ஈசனை அடைந்தவராக மட்டும் காட்டப்படுகின்றனர். இவர்களுக்கு மனைவியால் பெருமை ஏதும் ஏற்படவில்லை என்பது இதனால் புலனாகின்றது. ஆனால் இம்மூன்று அடியார்களின் மனைவியரும் கணவன்வழியே சரியென்று ஏற்று நின்றவர்களாவர்.

3.3. கணவன் செயலுக்கு வழிகாட்டினோர்

பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ள பெண்களில் சிலர் தன் கணவர்க்குச் சோதனை நேருங்காலத்து, அச்சோதனை களையப்பட வழி சொல்கின்றவர்களாகவும் விளங்கியுள்ளனர். அவ்வகையில் குங்குலியக்கலயனாரின் மனைவி, அரிவட்டாய நாயனாரின் மனைவி, அப்பூதி நாயனாரின் மனைவி, ஏயர்கோன் நாயனாரின் மனைவி ஆகிய நால்வரைக் குறிப்பிடலாம்.

3.3.1. குங்குலியக் கலய நாயனாரின் மனைவி

திருக்கடவூரைச் சார்ந்தவர் குங்குலியக் கலயனார். இவரின் மனைவியார் பெயர் குறிப்பிடப் படவில்லை. நாயனார் இறைவர்க்குக் குங்குலிய தூபம் இடும் பணியினர். இவருக்கு வறுமை மிக்குற அதனைத் தாங்காத இவரின் மனைவியார் தன் தாலியை விற்று உணவிற்கு நெல் வாங்கி வரக்கூறினார். ஆனால் நாயனார் அத்தாலிப் பொன்னிற்கு குங்குலியம் வாங்கித் தூபமிட்டார். இவரின் அரிய செயல் எண்ணி இறைவன் வறுமை தீர்த்து அருளினான்.

''மணம் நிகழப் பெற்ற ஒருமாது, திருமணக் காலத்தில் தனக்குக் கணவன் அணிவித்த மங்கலவணியை அவனது வாழ்வுள்ள மட்டும் இறைநிலையில் வைத்துப் போற்றிப் பேணி அணிவது வழக்கம். வறுமை முதலிய எவ்வகைத் துன்பத்திலும் அதனைப்பிரிய அவள் உடன்படுவதில்லை''[23] தீவினை வயத்தால் கணவனை இழக்க நேரும்போதுதான் அவள் தன் மங்கலவணியைத் துறக்க முன்வருகிறாள். வாழ்வரசியின் பண்புகளான அழகு, பொலிவு, நிறைவு, இன்பம் ஆகியவற்றை இம்மங்கலவணி காட்டுகின்றது, இவ்வளவு சிறப்புடைய தாலியை இவ்வம்மையார் கணவன் தன்னோடு பிரியாது இருக்குங்காலத்தே கொடுத்தமையினால் வழிகாட்டினவர் ஆகின்றார். மேலும் வறுமை போக்கக் கருதி இவர் அளித்த பொன் இறைபணிக்குப் பயன்பட்டதாலும் இறைவழி காட்டினவர் ஆகின்றார்.

3.3.2. அரிவட்டாய நாயனாரின் மனைவி

கணமங்கலம் என்னும் ஊரில் வாழ்ந்தவர் தாயனார். சிவபெருமானுக்குச் செந்நெல் அரிசியும், கீரையும், மாவடுவும் நாள்தோறும் அளிப்பது தாயனார் என்ற அரிவட்டாயரின் தொண்டாகும். இவர் இறைவனுக்கு உணவ்ளிக்கச் செல்லும்போது இவரின் மனைவியார், இறைவனுக்குப் பஞ்சகவ்வியம் எடுத்துக்கொண்டு பின் செல்வார். வறுமை இவர்க்கு வரப்பெறினும் தொண்டில் குறைந்தாரில்லை.

இவ்வடியார் தனக்கே உணவில்லாத காலத்தில் கூட இறைவர்க்குத் தொடர்ந்து உணவளித்துத் தொண்டாற்றினார். உணவிலாது வருந்திய அடியவர்க்கு அவரின் உடல்நலம் கருதி மனைவி, வீட்டில் உள்ள கீரைகளை வகைப்படுத்தித் தருகின்றார். அதுவும் அருகியபோது நீர்வார்த்து அடியவர் வாழ வகை செய்தார்.

''வைகலும் உணவிலாமை மனைப்படப் பையினிற் புக்கு
நைகரம் இல்லா அன்பின் நங்கை அடகுகொய்து
பெய்கலத் தமைத்து வைக்கப் பெருந்தகை அருந்தித் தங்கள்
செய்கடன் முட்டா வண்ணந் திருப்பணி செய்யும்''[24]

எனத் திருத்தொண்டு முட்டுப்படா வண்ணம் நாயன்மாரைப் பாதுகாத்தது இவரின் பெருமையாகும்.

3.3.3. அப்பூதி நாயனாரின் மனைவி

திங்களூரில் வாழ்ந்த அடியவர் அப்பூதியடிகள். திருநாவுக்கரசு நாயனாரிடம் அளவிலாப் பற்றுக் கொண்டவர். அவருடைய பிள்ளைகளுக்கும், திருமனையிலுள்ள அளவுக் கருவிகளுக்கும், மக்களுக்கும், பசுக்களுக்கும், எருமைகளுக்கும், மற்றை எல்லாவற்றிற்கும் 'திருநாவுக்கரசு' என்ற திருப்பெயரையே வைத்து வழங்குபவர். தாம் அமைந்த திருமடம், தண்ணீர்பந்தல், சாலை, குளம் முதலிய அறங்கள் பலவற்றிற்கும் திருநாவுக்கரசர் பெயரையே இட்டு வழங்கி வந்தார்.

இவரின் இல்லத்திற்கு ஓர்நாள், திருநாவுக்கரசர் வருகை

புரிந்தார். இவரின் வருகையைப் பெரும்பேறாகக் கருதி அப்பூதியடிகள் நாவுக்கரசருக்குத் திருவமுது செய்விக்கப் பெரிதும் விரும்பினார். அவர் தம் மனைவியாரை நோக்கி, ''திருநாவுக்கரசர் திருவமுது செய்ய இசைந்தது நாம் செய்த தவப்பயனாகும். இது சிவபெருமான் திருவருளினால் வந்தது. இதன்மூலம் நாம் கடைத்தேறுவோம்'' என்று கூறினார். இவரின் கூற்றுப் படியே அப்பூதியாரின் மனைவியாரும் திருவமுது செய்தார். பின் திருவமுது உண்பதற்கான வாழை இலையினைக் கொண்டுவருமாறு தம் மகன் மூத்த திருநாவுக்கரசினை ஏவினார். மூத்த திருநாவுக்கரசும் நல்ல தாய், தந்தை ஏவ இலையினை அறுக்க வாழைத் தோட்டம் புகுந்தான். பெரிய குருத்தினை அரியும் போது, பாம்பு ஒன்று அவனைத் தீண்டியது. இருப்பினும் அவன் விடத்தால் சோர்வுறுவதற்கு முன்பே இலையினைத் தாயின் கையில் கொடுத்து வீழ்ந்தான்.

> ''விரியுரை குழறி ஆவி விடங்கொண்டு மயங்கி வீழ்ந்தான்
> பரிசலக் குருத்தைத் தாயார் பால்வைத்துப் படிமேல்
> வீழ்ந்தான்''.[25]

விடக் குறிப்பு அறிந்த அப்பூதியாரும் மனைவியின் இசைவின்படி அவனைப் பாயினுள் வைத்துச் சுருட்டி, வீட்டின் புறத்தில் வைத்தனர். அதற்குப் பின்னர் திருநாவுக்கரசரை உணவுண்ண அழைத்து வந்தனர். வந்த நாவுக்கரசர் திருநீறு அளிக்கும் பொருட்டு, 'மூத்த திருநாவுக்கரசு எங்கே? எனக் கேட்டார். அப்பூதியடிகள் அதற்கு 'இப்போது இங்கவன் உதவான்' என்றார். இதுகேட்டுத் தடுமாற்றம் கொண்ட நாவுக்கரசர் உண்மையை உரைக்குமாறு அப்பூதியடிகளிடம் வேண்டினார். அடிகளும் உள்ளதைச் சொல்ல, நாவுக்கரசர் கோயிலின்முன் உடலை இட்டு, 'ஒன்றுகொலாம்' என்ற திருப்பதிகத்தைப் பாடி அவனை உயிர்ப்பிக்கச் செய்தார்.

'தாயார் பால் வைத்து' என்ற தொடரின் மூலம் மகனின் நிலையை முதலில் கண்டவர் அப்பூதியடிகளின் மனைவியார் ஆவார். ஆயினும் மகனைப் பற்றிக் கவலை கொள்ளாது அடிவயர்க்கு உணவிடக் கணவனாரை வழிப்படுத்திய செயல்

வியக்கத் தக்கது. அதுவே இவரை இத்தலைப்பில் இடம்பெற வகை செய்கின்றது.

3.3.4. ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் மனைவி

திருப்புன்கூரில் வாழ்ந்த நாயன்மார் கலிக்காமர். இவரின் மனைவியார் மானக்கஞ்சாறனாரின் மகளாவார். கலிக்காமர் இறைவனையே தூதுவிட்ட நம்பியாரூரரின் மீது சினங்கொண்டார். இவரின் சினந்தீர்க்கக் கருதிய இறைவன் இவருக்குச் சூலை நோயினைக் கொடுத்து, அஃது சுந்தரரால் தீரும் என அருளினான். சுந்தரரால் சூலை தீரவேண்டாம் எனக் கருதிய கலிக்காமர், வயிற்றைக் குத்திக் கிழித்துக் கொண்டார். இதுவறியாது இறைவனருளால் அறிவுறுத்தப் பெற்ற சுந்தரர் கலிக்காமர் வீட்டிற்கு வருகை புரிந்தார். கலிக்காமரின் மனைவியார், சுந்தரரைக் கணவன் இறந்திருந்தபோதும் மகிழ்வோடு வரவேற்றார். வருகை புரிந்த சுந்தரர் கலிக்காமரைக் காண எண்ண, இறந்துபட்ட கலிக்காமரை அவரின் மனைவியார் காட்டினார். கலிக்காமரின் வெறுப்பை அவரின் மனைவியார் மூலம் அறிந்து சுந்தரர், தானும் அழிய முற்பட்டார். இந்நேரத்தில் இறையருளால் கலிக்காமர் உயிர் பெற்றெழ இருவரும் கேளிர் ஆயினர்.

கணவன் சுந்தரர் பால் பகைமை கொண்டவர் என்பதை அறிந்தவர் ஆனாலும் அடியவரை வரவேற்று விருந்து புரக்கும் கணவரின் பணியை மேற்கொண்டு சுந்தரரை வரவேற்று, சுந்தரருக்குத் தன் கணவனாரின் உடலைக் காட்டி, கணவனார், உயர்நிலை அடைய வழிகாட்டியவர் இவ்வம்மையார்.

> ''கணவர் தம் செய்கை தன்னைக் கரந்துகா வலரை நம்பி
> அணைவுறும் பொழுது சால அலங்கரித் தெதிர்போம் என்னப்
> புணர்நிலை வாயிற் றீபம் பூரண கும்பம் வைத்துத்
> துணர்மலர் மாலை தூக்கித் தொழுதெதிர் கொள்ளச் சென்றார்''[26]

என்ற இப்பாடலின் மூலம், கணவனார் இறந்தபோதும் இவ்வம்மையார் தீபம், பொற்குடம் வைத்துச் சுந்தரரரை வரவேற்றமையால் - கணவர்க்கு மெய்வழி காட்ட வழிகோலியவர்

ஆகின்றார்.

இந்நால்வரும் தத்தம் செயற் பண்புகளுக்கேற்பக் கணவர்க்கு வழிகாட்டியவர்களாக விளங்குகின்றனர்.

3.4. கணவன் வழி கடிந்தோர்

கணவனின் தவறான ஒழுக்கங்களைக் கடிந்தவராகவும் பெரியபுராணத்துப் பெண்கள் திகழ்ந்துள்ளனர். இதற்குச் சான்றாக - திருநீலகண்ட நாயனார், சுந்தரர் ஆகியோரின் மனைவியரைக் காட்டலாம்.

3.4.1. திருநீலகண்ட நாயனாரின் மனைவி

இவரின் பெயர் அறியப்பட முடியவில்லை. தில்லையம்பதியில் குயவர் குலத்தில் பிறந்தவர் திருநீலகண்டர். இவர் தம் குலத்தொழிலால் அடியவர்க்குத் திருவோட்டினை அளிக்கும் பணியினைத் தொண்டாகச் செய்து வந்தார். இவர் சிற்றின்ப மிகுதியால் ஒருமுறை பரத்தை வீட்டிற்குச் சென்றுவந்தார். இவரின் இச்செயலால் வருந்திய மனைவியார் இனி ''வாழ்நாள் முழுவதும் எம்மைத் தீண்டுவாராயின் திருநீலகண்டம்'' என்று ஆணையிட்டுத் தனித்து வாழ்ந்தார். பொருட் பெண்டிர் பற்றி வள்ளுவர்

''பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று''[27]

என்று குறிப்பிடுவார். ''நன்னேன் பரத்த நின் மார்பு''[28] என்ற மரபின்படியும் அம்மையார், பரத்தமை ஒழுக்கத்தைக் கடிந்தார். கணவனாரோடு உடலால் பங்குகொள்ளலைத் தவிர்த்து மற்ற பணிகளைக் குறைவிலாது செய்து வந்தார்.

''அங்கோர் பரத்தைபால் அணைந்து நண்ண
மானமுன் பொறாது வந்த ஊடலால் மனையின் வாழ்க்கை
ஏனைய எல்லாஞ் செய்தே உடனுறை இசையார் ஆனார்''[29]

என ஒவ்வாவழிச் சென்ற கணவரை, இவ்வம்மையார் ஊடலால் கடிந்து கணவரின் இன்பத்துறையில் எளியரான

செய்கையை மாற்றச் செயல்பட்டமையைச் சேக்கிழார் சுட்டிக்காட்டுகிறார். பின்னாளில் இறைவன் இவர்களின் ஊடலையும், முதுமையையும் தீர்த்து மீண்டும் இளமையாக்கினார். அடியவரின் வாழ்க்கைத் துணை - அடியவரின் பண்புநலன்களைப் பாதுகாப்பதற்கும் உரியது என்பதை இவ்வரலாறு சுட்டுகிறது.

3.4.2. சுந்தரரின் மனைவியர்கள்

சுந்தரருக்கு அமைந்த இரு மனைவியர் பரவையார், சங்கிலியார் என்று பெயர்பெறுகிறார்கள். இவ்விருவரும் சுந்தரரின் மாறுபட்ட செயல்களைக் கடிந்தவர் களாகவே படைக்கப் பட்டுள்ளனர்.

3.4.2.1. பரவையார்

முற்பிறப்பில் கமலினி என்று பெயர் பெற்று உமாதேவியாரின் சேடியர்களுள் ஒருவராக விளங்கியவர். இவர் நம்பியாரூரர் சங்கிலியாரை மணந்த செய்தி தெரிந்ததும் கணவரிடம் ஊடல் கொள்ளுகின்றார். பின்னால் இறைவனின் இருமுறை தூதினால் சுந்தரரிடம் அன்பு கொள்ளுகின்றார்.

"செம்மை நெறி சேர் திருநாவ லூரார் ஒற்றி யூர்சேர்ந்து
கொம்மை முலையார் சங்கிலியார் தம்மைக் குலவு மணம் புணர்ந்த
மெய்ம்மை வார்த்தை தாம்அவர்பால் விட்டார் வந்து கட்டுரைப்பத்
தம்மை அறியா வெகுளியினால் தரியா நெஞ்சினொடும் தளர்வார்"[30]

என்ற பாடலின் மூலம் சுந்தரர் செயலால் ஊடல் கொண்டு அவரின் வழியைக் கடிந்தவராகப் பரவையாரைக் காணலாம்.

3.4.2.2. சங்கிலியார்

முற்பிறப்பில் உமையாம்பிகையினுடைய சேடிமார்களுள் ஒருவராக விளங்கியவர். அப்பிறவியில் அநிந்திதையார் எனப் பெயர் பெற்றிருந்தார். விண்ணில் சுந்தரர் மேல் கொண்ட மையலால் மண்ணில் பிறந்து அவரையே மணந்த திறத்தினர்

ஆவார். அவ்வாறு மணந்த பின் தன்னை ஆரூரர் பிரியாதிருக்க வேண்டி சத்தியம் வேண்டிப் பெற்றார். இவரின் சத்தியம் மீறிய போது சுந்தரருக்குக் கண்கள் ஒளி இழந்து போயின.

''பொற்றொடியோய் உனைஇகந்து போகாமைக் கொரு சபதம்
அற்றமுறு நிலைமையினால் அவன் செய்வான் என அருளி''[31]

என்று இறைவன் கூறியபடி சங்கிலியார், சுந்தரரிடம் சத்தியத்தினை மகிழமரத்தின் கீழ் பெறுகிறார். சுந்தரரின் இருவிதப் போக்கறிந்து அவரைத் தன்னின்று பிரியாதபடி சத்தியம் பெற்றமையே இவரை இங்கு காண்பதற்கு ஏதுவாகின்றது.

இம்மூவரும் கணவரின் ஒவ்வாத ஒழுக்கங்களை ஊடலால் கடிந்தவர்கள் ஆவர்.

3.5. கணவனைத் தனது அருஞ்செயலால் விஞ்சியவர்

இறைவர்க்குக் கணவர் செய்த செயலைக் காட்டிலும் விஞ்சிய செயல்புரிந்த மனைவியார் ஒருவரும் பெரியபுராணத்துள் காட்டப்படுகின்றார்.

3.5.1. திருநீலநக்க நாயனாரின் மனைவி

இவரின் பெயர் அறியப்பட முடியவில்லை. இவர் சாத்தமங்கையில் வாழ்ந்த திருநீலநக்க நாயனாரின் மனைவியார் ஆவார். திருநீலநக்க நாயனார் சிவ ஆகமவிதிப்படி சிவபெருமானைப் பூசிப்பதையும், சிவனடியார்களுக்கு திருவமுது செய்வித்தலையும் தொண்டாகக் கருதிச் செயல்படுபவர்.

ஒருமுறை திருவாதிரை நாளில் அயவந்தி ஈசனை வழிபட எண்ணி ஆலயம் வந்துற்றார். இவரின் மனைவி, இறைவனின் வழிபாட்டிற்குரியவற்றை ஏற்றவாறு அமைத்துக் கொண்டு கணவருடன் கோயிலுக்கு வந்தார். நாயனார் சிவபெருமானுக்குப் பூசைபுரிந்த பின் திருவைந்தெழுத்தைச் சொல்லியவண்ணம் கண்களை மூடித் தியானத்தில் இருந்தார். இந்நேரத்தில் சுதைசிலம்பி

ஒன்று இறைவன்மீது தன்நிலை கெட வீழ்ந்தது. இது கண்டு துடித்த அம்மையார் தன் வாயினாலேயே சிலந்தியை ஊதிப் போகும்படி செய்தார்.

இச்செயல் நிகழும் நேரம், நாயனார் கண் விழிக்கின்றார். இக்காட்சி கண்ட அவர், வெகுண்டு தூய சிவலிங்கத்தை அசிதம் செய்தனையே என வருந்தி அழுதார். அத்தோடு அம்மையாரைத் துறந்தேன் எனக் கோயிலிலேயே அவரை விட்டுவிட்டு மனைவந்து சேர்ந்தார். அன்றிரவு, நாயனாரின் கனவில் எம்பெருமான் கொப்புளங்களோடு தோன்றி, ''உமது மனைவி ஊதிப்போக்கிய இடம் தவிரப் பிற இடங்களிலெல்லாம் சிலம்பியின் கொப்புளங்கள் தோன்றியுள்ளன; காண்பாயாக!'' என மொழிந்தார். நாயனார் கனாக்கண்டு மனைவியாரின் இறைவன் மெச்சிய செயலை எண்ணி வியந்து விடியலில் கோயிலினுள் புகுந்து மனைவியை இல்லத்திற்கு அழைத்து வந்தார்.

''விழுந்த போதில் அங் கயல்நின்ற மனைவியார் விரைவுற்று
எழுந்த அச்சமோ டிளங்குழ வியில்விழுஞ் சிலம்பி
ஒழிந்து நீங்கிட ஊதிமுன் துமிப்பவர் போலப்
பொழிந்த அன்பினால் ஊதிமேல் துமிந்தனார் போக''[32]

என்று பாடலில் கூறுவது போல், இறைவனைத் தன் குழந்தையாகப் பாவித்து, அவனுக்குச் சிலம்பியினால் இன்னல் வந்தபோது விரைந்து அகற்றிய தாயாக அம்மையார் விளங்கிச் சிறப்பிடம் பெறுகின்றார். இறைவனை வழிபடுகின்ற கணவர், இறைவனின் திருமேனியைப் புனிதமாகக் கருதினாரே அன்றிப் பாசத்தோடு கண்டாரில்லை. ஆனால் அவரின் மனைவியோ இறைவன் திருமேனியைத் தாய்ப்பாசத்தோடு கண்டு திருமேனிக்குத் தீங்குவராமல் காத்தமையால், கணவரை மிஞ்சிய திருப்பணித் தொண்டராக விளங்குகிறார் எனலாம்.

3.6. முடிவுகள்

1. பெரியபுராணத்துப் பெண்கள் என்ற வரிசையில்

பெண்நாயன்மார்களுக்கு அடுத்த நிலையில் சிறப்பிடம் பெறுவோர் நாயன்மார்களின் மனைவியர் ஆவர். இவர்கள் தம் கணவர்க்கு ஏற்ற மனைவியராய் அமைந்ததோடு, கணவன் வழியே தன்வழி எனக்கொண்டு, கணவனின் செயலுக்கு வழிகாட்டி, கணவனின் ஒவ்வாத செயலைக் கடிந்து, கணவனைத் தன் அருஞ்செயலால் விஞ்சி என்று பல நிலைகளில் விளங்கிச் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

2. மனைவியர் என்ற அளவில் மட்டும் அறிமுகமாகும் பெண்மையர், தமக்கென்று தனித்த செயல்பெருமை ஏதும் இல்லாது நாயன்மார்களின் மனைவியர் என்ற அளவிலேயே சிறப்புப் பெற்றுள்ளனர் என்பதை அறிய்முடிகின்றது.

3. கணவன் வழியே தன்வழி எனக்கொண்ட பெண்மையர், கணவன் தன்னையே விற்கக் கருதியபோதும், தன் மகவை அரியக் கருதியபோதும், தன் உடலங்களை அறுத்தபோதும் கலங்காது, மறுத்து மொழியாது கணவரின் வழியையே ஏற்றுக் கொண்டவர்களாகத் திகழ்ந்துள்ளனர் என்பது தெரியவருகிறது.

4. கணவன் செயலுக்கு வழிகாட்டிய பெண்மக்கள் கணவனுக்குப் பெருமை ஏற்படுத்துவதற்காக, தாலியைக் கொடுத்தும், தன்மகனின் உயிரைத் துச்சாகக் கருதியும், தன் கணவன் இறந்த துன்பத்தை வெளிகாட்டாமலும் விங்கியுள்ளமையை அறியமுடிகின்றது.

5. கணவன் வழி கடிந்த பெண்மையர், கணவனின் ஒவ்வாத ஒழுக்கமான பிறபெண்டிர் நாடலை ஊடலால் கடிந்துள்ளனர் என்பதை உணர முடிகின்றது.

6. கணவனைத் தன் அருட்செயலால் விஞ்சிய பெண்மையார், இவர்கள் அனைவரையும் விஞ்சிய பெருமையை உடையவராகக் கருதப்படக் கூடியவர் ஆவார்.

குறிப்புகள்

1. பெ.பு. மெய்ப்பொருள், நா.பு.பா.10 : 3-4

2. பெ.பு. அமர்நீதி. நா.பு.பா. 42 : 3-4
3. திருக்; 55.
4. பெ.பு. மானக்கஞ்சாற, நா.பு.பா.11 : 2-4
5. தி.தொ.பு. உரைநடை, ப.120
6. பெ.பு. நமிநந்தி அடிகள், நா.பு.பா. 11 : 2-4
7. சுப. அண்ணாமலை, மக்களை எட்டிய மறைத்தமிழ், மீனாட்சிநூலகம், மேலைச்சிவபுரி, ஆகஸ்ட், 1998, ப. 123
8. பெ.பு. திருஞானசம்பந்த சுவாமிகள் பு.பா. 1253.
9. பெ.பு. கோட்புலி நா.பு.பா.9.
10. பெ.பு. திருஞானசம்பந்த சுவாமிகள், பு.பா. 131 : 2.
11. திருக்குறள் 56
12. குறுந் பா. 135
13. திருக். 55
14. பெ.பு. இயற்பகை நா.பு.பா.9 : 4
15. மேற்படி பா. 9 : 1-2
16. பெ.பு. இளையான்குடிமாற நா.பு.பா.64
17. பெ.பு. சிறுத்தொண்ட நா.பு.பா. 64
18. மேற்படி பா.81 : 3-4
19. மேற்படி பா.17 : 2-3
20. பெ.பு. கலிக்கம்ப.நா.பு.பா. 8 : 2-4
21. பெ.பு. கலிய. நா.பு.பா. 13
22. பெ.பு. கழற்சிங்க நா.பு.பா. 10
23. ஆர். வீரபத்திரன், மங்கலவணி, பாரிநிலையம், சென்னை, ஆகஸ்ட் 1968, ப.55

24. பெ.பு. அரிவட்ட நா.பு.பா. 12.

25. பெ.பு.அப்பூதிஅடிகள் நா.பு.பா. 27

26. பெ.பு. ஏயர்கோன் கலிக்காம. ந.பு.பா.399

27. திருக். 914

28. திருக். 1311

29. பெ.பு. திருநீலகண்ட நா.பு.பா. 5 : 1-3

30. பெ.பு. ஏயர்கோன் கலிக்காம, நா.பு.பா. 314

31. மேற்படி பா. 243 : 3-4

32. பெ.பு. திருநீலநக்க நா.பு.பா.12.

✦... பின்னிணைப்பு

4. உறவுமுறையினரும் பிறரும்

சேக்கிழார் தன்காலத்துச் சமுதாயப் பெண்மையரின் நெறிகளைத் தன் காப்பியத்தில் படைத்துக் காட்டியிருக்கிறார். முதல் நூல்களான தொகையிலும், அந்தாதியிலும் பெயரளவில்கூட இடம் பெறாத பெண்களைத் தம் ஆய்வு நுணுக்கத்தால், வரலாற்றுப் புலமையால் தன் காப்பியத்தில் இடம் பெறச் செய்து அவர்தம் பெருமையை விவரித்திருக்கிறார். அப்பெருமைக்கு உரியோரில் உறவுமுறைப் பெண்களைப் பற்றியும், பிறரைப் பற்றியும் இக்கட்டுரை இயம்புகிறது. உறவினர் என்ற முறையில் எண்மரும், உறவினரல்லாத பிறர் என்ற முறையில் பதின்மரும் ஆக பதினெட்டுப் பெண்கள் ★ இங்கு காணத் தக்கோராகின்றனர்.

4.1. உறவினர்

உறவினர் என்ற இவ்வரிசையில், நாயன்மார்க்குத் தாயாக, மகளாக, தமக்கையாக விளங்கிய சிலபெண்கள் இடம் பெறுகின்றனர்.

4.1.1. நாயன்மார்க்குத் தாயர்

கண்ணப்ப நாயனார், சண்டேச நாயனார், திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்த நாயனார், கோச்செங்கட் சோழ நாயனார் என்ற ஐந்து நாயன்மார்களை ஈன்றெடுத்த தாய்மார்கள் பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ளனர்.

4.1.1.1. தத்தை

வேடர்குலத்துதித்த தின்னன் என்ற கண்ணப்ப நாயனாரின் தாய் தத்தை. தத்தையின் கணவர் நாகன்.

> ''அரும்பெறல் மறவர் தாயத் தான்றதொல் குடியில் வந்தாள்
> இரும்புலி எயிற்றுத் தாலி யிடையிடை மனவு கோத்துப்
> பெரும்புறம் அலையப் பூண்டாள் பீலியும் குழையும் கட்டச்
> சுரும்புறு படலை மூச்சிச் சூர் அரிப் பிணவு போல்வாள்''[1]

என்று பெரியபுராணப்பாடல் இவரியல்பினை விளக்குகின்றது. தத்தை என்பவள் பழமை பொருந்திய வேடர் குலத்தில் தோன்றியவள். சங்கு மணிகளுடன் கோத்த புலிப்பல் தாலியை அணிந்தவள். மயிற்பீலியும் இளந்தழையும் கொண்ட பூமாலையை அணிந்தவள். அச்சந்தரும் பெண்சிங்கத்தை ஒத்த தோற்றம் உடையவள். திண்ணனாரை ஈன்றெடுத்த செயலே இவருக்குச் சிறப்பாகும். உவர்க்கடல் நிறைமதியினைப் பெற்றதுபோலத் தத்தை, திண்ணனைப் பெற்றெடுத்தாள் எனச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

4.1.1.2. பவித்திரை

திருசேய்ஞலூரில் பிறந்தவர் விசாரசருமர். இவர் இறைவன்மேல் கொண்ட பற்றினால் ஆநிரைகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது இறைவனுக்குப் பாலினால் திருமுழுக்கு செய்வித்தார். இதற்குத் தடைசெய்த தந்தை எச்சதத்தனாரின் காலை அடுத்து இறைவனால் சண்டேச பதத்தை விசாரசாருமர் பெறுகின்றார். இவரின் தாயார் பவித்திரையார் ஆவார். பவித்திரையின் பண்புகளை

> ''மற்றை மறையோன் திருமனைவி வாய்ந்த மரபின் வந்துதித்தாள்
> சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத் தொழிலாள் உலகில் துணைப்புதல்வர்
> பெற்று விளங்குந் தவஞ்செய்தாள் பெரும்பே றெல்லைப் பயன் பெறுவாள்
> பற்றை எரியும் பற்றுவரச் சார்பா யுள்ள பவித்திரையாம்''[2]

எனச் சேக்கிழார் பாடுகின்றார்.

இல்லத்து மகளிர்க்கு, சுற்றம் ஓம்பல், நல்ல புதல்வரைப் பெறுதல், சிவன் மேல் பற்றுக் கொள்ளல் என்பனவற்றைப் பண்பாகச் சேக்கிழார் கருதினமையால், இம்மூன்றினையும் ஒருங்கே பெற்ற பவித்திரையாரை, திருமனைவி என்று குறிப்பிடுகின்றார். ''பற்றை எரியும் பற்று'' என்றதொடர், ''பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு''[3] என்ற

திருக்குறளோடு ஒப்பு நோக்கத் தக்கது. தான் பெற்ற புதல்வர் பேற்றினால் பிற உயிர்களுக்கும் பற்றை அழிக்கும் பற்றுவர இவ்வம்மையார் சார்பினராக அமைந்தார் என்ற குறிப்பு இத்தொடரில் அமைந்துள்ளது.

4.1.1.3. மாதினி

இவர் 'புகழனார்' என்பவர்க்கு மனைவியாகியவர். திலகவதி, திருநாவுக்கரசு என்ற இருவரையும் ஈன்றெடுத்த தாய் ஆவார்.

> "புகழனார் தமக்குரிமைப் பொருவில்குலக் குடியின்கண்
> மகிழவரு மணம்புணர்ந்த மாதினியார் மணிவயிற்றில்
> நிகழுமலர்ச் செங்கமல நிரையிதழின் அகவையினில்
> திகழவருந் திருவனைய திலகவதியார் பிறந்தார்."[4]

> "உலகில் வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல்பின்
> மலருமரு ணீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார்"[5]

எனச் சிறப்பு மிக்க இரு அடியார்களைப் பெற்ற பெருந்தாயார் இவர் ஆவார். சேக்கிழார், மாதினியாரின் பெருமையை இரு அடியார்களைப் பெற்றதில் மட்டும் அமைக்காது, கணவரின் வாழ்வோடு ஒன்றிய நிலையிலும் விளக்குகின்றார். திலகவதியாருக்கு மணம் பேசிய கலிப்பகையார் திருமணம் நடைபெறுவதற்கு முன்னால் வடபுலத்துப் போருக்குச் சென்றவர் போரில் விண்ணுலகு அடைந்தமையால் அதுகேட்ட புகழனாரும் அப்பிரிவெனும் பிணியால் விண்ணுலகு அடைந்தார். கணவர் புகழனார் உயிர்நீப்ப, மாதினியார் வாழவேண்டிய மக்களைக் கூட நினையாமல், இறந்துபட்ட கணவனையே நினைத்துத் தானும் உயிர் நீந்தார். இதனைக் குறிப்பிடும் பொழுது சேக்கிழார் 'உடன் என்றும் பிரியாத உலகெங்கும், கற்புநெறி வழுவாமல் கணவருடன் சென்றார்' எனக் குறிப்பிடுகின்றார். மாதினியாரின் இறப்பு அன்றையக் கற்புநெறி எனத் தெரிகிறது.

4.1.1.4. பகவதி

இவர் திருஞான சம்பந்தரைப் பெற்றெடுத்த பெரும்பேற்றினர். இவரின் கணவர் சிவபாத இருதயர்.

''மற்றவர்தந் திருமனையார் வாய்ந்தமறை மரபின்வரு
பெற்றியனார்; எவ்வுலகும் பெறற்கரிய பெருமையினர்
பொற்புடைய பகவதியார் எனப்போற்றும் பெயருடையார்
கற்புமேம் படுசிறப்பால் கணவனார் கருத்தமைந்தார்''[6]

என்ற பாடலில் கணவரின் கருத்துக் கிசைந்து வாழ்ந்த கற்புடையப் பெண்மையராய் சேக்கிழாரால் போற்றப் படுகிறன்றார். இவர் தவிர ஞானசம்பந்தரை இளவயதில் நற்றாயர் சிலரும் வளர்த்ததாகப் பெரியபுராணத்தில் குறிப்புண்டு. நற்றாயர் பற்றிய குறிப்பை ''தாயர் திருமடித்தலத்தும்''[7] என்பதனால் அறியலாம்.

4.1.1.5. கமலவதி

கோச்செங்கட் சோழ நாயனாரின் தாயார். இவரின் கணவர் சுபதேவன் என்ற அரசர். முற்காலத்தில் காட்டுச் சருகுகளினின்று சிவலிங்க உருவத்தைக் காத்து முக்தி அடைந்த சிலந்தியானது கமலவதியின் வயிற்றில், அவள் செய்த பெருந்தவத்தால் ஆண் மகவாகப் பிறந்தது.

கமலவதியார் பெருமை பெற்ற ஆண்மகனைப் பெறுங்காலத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் இக்குழந்தை இப்போது பிறக்கும் நேரத்தினின்று ஒரு நாழிகைக் கழித்துப் பிறக்குமேல் - ''உழையார் புவனம் மூன்றும் ஆண்டு, சிவனுக்கு அருட்கோயில்கள் பல கட்டும்'' எனக் காலங்கணிப்போர் கனித்துக் கூற - ஒரு நாழிகை கழித்துக் குழந்தை பிறக்க அரசர் அன்பு ஆணையிட்டார். குழந்தை ஒரு நாழிகைக் கழித்துப் பிறக்க வேண்டி, சூழ்ந்திருந்த சேடிமார்களைப் பார்த்துத் தன் கால்களை மேலாகும்படியும் தலை கீழாகும் படியும் உத்திரத்தில் கட்டச் சொன்னாள் கமலவதி. அவர்களும் அவ்வாறே கட்டினர்; குழந்தை ஒரு நாழிகை வரை தாயின் கருப்பையிலேயே இருந்தது. ஒரு நாழிகை கழிந்த பின் கமலவதியார் கட்டுகளை அவிழ்க்கச் செய்து ஒப்பற்ற ஆண்மகவை ஈன்றெடுத்தார். பிறந்த மகவின் கண்கள் பிறக்கும் நேரந்தாண்டி ஒரு நாழிகை தாயின் வயிற்றிலேயே இருந்தமையால் சிவந்திருந்தன. இதுகண்ட கமலவதியார், என்மகன் கோச் செங்கண்ணானோ' எனச் சொல்லி விட்டுப் பிரசவித்த துயர் வருத்த இயற்கை எய்தினார்.

''பிறவா தொருநா ழிகைகழித்தென் பிள்ளை பிறக்கும் பரிசென்கால்,
உறஆர்த் தெடுத்துத் தூக்கும் எனஉற்ற செயல்மற் றதுமுற்றி
அறவா ணர்கள்சொல் லியகாலம் அணையப் பிணிவிட் டருமணியை
இறவா தொழிவாள் பெற்றெடுத்து என்கோச்செங் கண்ணா னோஎன் றாள்''[8]

கணவரின் கட்டளைக்கு ஏற்ப - தன் உயிரையும் அற்பமெனக் கொண்டு குழந்தை ஈன்ற பெருமையவர் இவர்.

தத்தை, பவித்திரையார், மாதினியார், பகவதியார், கமலவதியார் ஆகிய இவ்வைவரும் நாயன்மார்களை ஈன்றெடுத்துச் சிறந்தவர்களாவர். இத்துடன் தத்தம் கணவரின் திருத்தொண்டிற்கு ஏற்ப - எண்ணத்திற்கு ஏற்ப வாழ்ந்த கற்புடைப் பெண்மையரும் ஆவர்.

4.1.2. நாயன்மாரின் தமக்கை

நாயன்மாரின் தமக்கை என்ற உறவில் அறியப்படுபவர் திலகவதியார் ஆவார். இவர் திருநாவுக்கரசரை நல்வழிப்படுத்திய பெருமையர். திலகவதியாருக்குத் திருமண வயதெய்திய போது அவரின் பெற்றோர் மணமுடிக்க எண்ணினார். இவருக்கு 'கலிப்பகை' என்பவர் மணமகனாக உறுதி செய்யப்பட்டார். ஆனால் திருமணத்திற்கு முன்பே கலிப்பகை போர்க்களத்தில் வீரமரணம் எய்தினார். இதனால் துயருற்ற திலகவதியார் உயிர் துறக்க எண்ணங்கொள்ள, தாய் தந்தையரை இழந்து துன்புறும் தம்பியின் வாழ்வு கருதி தன் முடிவை மாற்றிக் கொள்கின்றார். இருப்பினும் வாழ்விறுதி வரை கைம்பெண்ணாகவே வாழ்கின்றார்.

''தம்பியார் உளராக வேண்டும் எனவைத்த தாய
உம்பருல கணையவுறு நிலைவிலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி''
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார்''[9]

என இவரின் மாசற்ற நிலையைச் சேக்கிழார் சுட்டுகின்றார்.

திருவாமூரூரிலிருந்த திலகவதியார் சிவபக்தி முதிர்வால் தொண்டுசெய்ய விரும்பித் திருவதிகை வீரட்டானம் சென்று சிவப்பணி செய்து வந்தார். அப்போது தன்னுடன் பிறந்த மருணீக்கியார் சமணசமயம் சார்ந்திருப்பதை எண்ணி, அவரை ஆட்கொள்ள இறைவனை வேண்டுகிறார். இறைவனும் அம்மையார் கனவில் தோன்றி, ‘சூலைநோய் தந்து ஆட்கொள்வோம்’ என மொழிந்தான். மருணீக்கியாருக்குச் சூலை நோய் வர அதனைச் சமணர் குணப்படுத்த முடியாது வருந்தினர். இது கண்டு மருணீக்கியார் தன் தமக்கையாரையே துணை எனக்கருதி திருவதிகை வருகிறார். வந்தவருக்கு அம்மையார் திருநீறளித்துத் திருக்கோவிலுக்கு அழைத்துப் போகச் சூலைநோய் குறைகின்றது. ‘கூற்றாயினவாறு’ என மருணீக்கியார் பாட, சூலைநோய் போயொழிகிறது. பின் அவர் திருநாவுக்கரசராகிச் சைவத் தொண்டில் ஈடுபடுகின்றார். இவ்வாறு திருநாவுக்கரசரின் தமக்கையார் அவருக்குச் சிவநெறி புகட்டிச் சிறப்பிடம் பெறுகின்றார்.

4.1.3. நாயன்மாரின் மகள் என்ற உறவினர்

கோட்புலி நாயனாரின் மகளார் இருவரும் இவ்வுறவுமுறையில் வைத்துக் காணத்தக்கவராவர்.

4.1.3.1. சிங்கடி, 4.1.3.2. வனப்பகை

இருவரும் கோட்புலியாரின் பெண்மக்களாவர். கோட்புலி இவர்களை ஆரூரரான சுந்தரரிடம் அடிமையாகக் கொள்ள வேண்டும் என வேண்ட, சுந்தரர் மறுத்து இவர்களைத் தன்னுடைய மக்களாக ஏற்றுக் கொள்கின்றார்.

‘‘அடியேன் பெற்ற மக்களிவர் அடிமை யாகக் கொண்டருளிக்
கடிசேர் மலர்த்தாள் தொழுதுய்யக் கருணை யளிக்க
வேண்டும் எனத்
தொடிசேர் தளிர்க்கை இவர் எனக்குத் தூயமக்கள் எனக்
கொண்டப்
படியே மகண்மை யாக்கொண்டார் பரவை யார்தன்
கொழுநனார்’’[10]

இவ்வாறு நாயன்மாரின் உறவினப் பெண்கள் மூவகையுள் அடங்கி, எண்மராகப் பெரியபுராணத்தில் இடம் பெறுகின்றனர்.

4.2. பிறர்

பிறர் என்ற பிரிவில் நாயன்மார் வீட்டில் பணியாளாகவும், நாயன்மார்களால் துயரந் தீர்ந்தவர்களாகவும், மற்றும் நாயன்மார்களின்வாழ்வினை ஒட்டி இடம் பெற்றவர்களாகவும் அமைந்த பெண்கள் அடங்குகின்றனர்.

4.2.1. நாயன்மார் வீட்டில் பணியாளாகப் பணிபுரிந்தவர் :

சிறுத்தொண்டர் வீட்டில் பணியாளாக இருந்து பணிபுரிந்த 'சந்தன நங்கையார்' ஒருவரே இங்கு இவ்வகையில் அறியப்படுகின்றார்.

சிறுத்தொண்டரும், அவரின் மனைவி வெண்காட்டு நங்கையும் பயிரவச் சங்கமருக்குப் பிள்ளைக்கறிபடைக்க ஆயத்தமாகின்றனர். தந்தையான சிறுத்தொண்டர் நல்ல திருமகனாரை எடுத்துத் தலையைப் பிடித்துக் கொள்ள, தாயார் விரைந்து கிண்கிணி அணிந்த கால்கள் இரண்டினையும் தம்கைகளினால் பிடித்துக் கொள்ள, சிறுத்தொண்டர் ஆயுதத்தினால் மகனின் தலையைக் கொய்தார். திருவெண்காட்டு நங்கையார் அரிந்து எடுத்த தலையின் இறைச்சி திருவமுதுக்கு ஆகாதென்று கழித்து அதனைச் சந்தனநங்கையார் கையில் கொடுத்துவிட்டு, மற்றைய உறுப்புகளின் இறைச்சிகள் எல்லாவற்றையும் கொத்தியும், அறுத்தும், எலும்பினுள்ளே உள்ள மூளைப்பகுதியைத் திறந்தெடுத்திட்டும் அடுப்பில் ஏற்றிச் சமைத்திட்டார்.

சமைத்து முடித்த பின் உணவு உண்பதற்காகச் சிறுத்தொண்டர், பயிரவ சங்கமரை அழைத்து வந்தார். உணவு உண்ண வந்தவர், "எல்லாக் கறிவகைகளும் உண்ணுமாறு படைக்கப் பட்டனவா?" என வினவினார். 'தலைக்கறி உண்ண ஆகாது என விலக்கிச் சமைத்தேன்' என வெண்காட்டு நங்கை கூற, 'தலைக்கறியும் உண்ணவேண்டும்' எனச் சங்கமர் கூறினார். அதுகேட்டுச்

சிறுத்தொண்டர் மனைவியாருடனே திகைத்து வருந்த, அப்போது பணியாளரான சந்தநங்கையார், ''நான் தலையின் இறைச்சியை அடியவர் திருவமுது செய்ய நினைக்கலாம் என்று கருதி அதனைக் கறியமுதாக அமைத்து வைத்துள்ளேன்'' என்றுகூறி அதனை எடுத்துவந்து அளித்தார்.

இதனைச் சேக்கிழார்

''சிந்தை கலங்கிச் சிறுத்தொண்டர் மனையா ரோடுந்
திகைத்தயரச்,
சந்த னத்தார் எனுந்தாதி யார்தாம் அந்தத் தலையிறச்சி,
வந்த தொண்டர் அமுதுசெயும் பொழுது நினைக்க
வரும்என்றே
முந்த அமைத்தேன் கறியமுது என்றெடுத்துக் கொடுக்க
முகமலர்ந்தார்''[11]

என்று படைத்துள்ளார்.

''யான் கண்டனையாரென் னிளையரும் வேந்தரும்''[12] என்று பிசிராந்தையார் ஏலவரைப் பெற்றதுபோல, சிறுத்தொண்டரின் குடும்பமும் நல்லதொரு பணியாளரைப் பெற்றிருந்தது என்பது சிறப்பிற்கு உரியதாகும்.

4.2.2. நாயன்மார்களால் துயரந்தீர்ந்தோர்

சம்பந்தரும், சுந்தரரும் சில பெண்மக்களை வருத்திய துயரத்தினின்று, அவர்களை விடுவித்த அருட்செயல்களைப் புரிந்திருக்கிறார்கள். அவ்வகையில் சம்பந்தரிடம் பிணி தீர்ந்தவர்களாக மூவரும், சுந்தரரிடம் நோய் தீர்ந்தவராக ஒருவரும் இடம் பெறுகின்றனர்.

4.2.2.1. சம்பந்தரிடம் துயரந்தீர்ந்தோர்

சம்பந்தர் மூலம் துயரந் தீர்ந்தவர்கள் கொல்லிமழவன் மகள், வைப்பூர் தாமன் மகள், பூம்பாவை ஆகிய மூவர் ஆவர்.

4.2.2.1.1. கொல்லிமழவன் மகள்:

திருப்பாலாச்சிரமம் என்னுமூரில் கொல்லிமழவன் என்னும்

அரசன் இருந்தான். அரசனின் அழகுநிறைந்த மகளுக்கு, முயலகநோய் ஏற்பட்டிருந்தது. இவ்வருத்தம் போக்க, மழவன் ஞானசம்பந்தரிடம் முறையிட்டான். சம்பந்தரும் 'துணிவளர் திங்கள்'[3] என்ற பதிகத்தினைப்பாடி முயலக நோயினைத் தீர்ந்தருளுகின்றார்.

''பன்னு தமிழ்மறை யாம்பதிகம் பாடித்திருக்கடைக் காப்புச்
சாத்தி
மன்னுங் கவுணியர் போற்றி நிற்க மழவன்பயந்த
மழலைமென்சொல்
கன்னி யுறுபிணி விட்டுநீங்கக் க்துமெனப் பார்மிசை
நின்றெழுந்து
பொன்னின் கொடியென நல்கிவந்து பொருவலித் தாதை
புடையணைந்தாள்''[14]

என்ற பெரியபுராணப் பாடல் மூலமாக நோய் தீர்த்தபெண் பற்றி அறியலாம்.

4.2.2.1.2 வைப்பூர் தாமன் மகள்

வைப்பூர் என்ற ஊரில் வாழ்ந்த தாமன் என்பவனுக்கு ஏழு மகள்கள் பிறந்தனர். இவர்களில் முதலாமவளைத் தாமன் ஒரு வணிக மகனுக்கு மணம்முடிப்பதாக வாக்களித்து அவனிடம் பெரும் பொருள்பெற்றுப் பின் வேறொருவனுக்கு மணமுடித்துக் கொடுத்தான். இரண்டு, மூன்று.... இப்படி ஆறுமகள்களையும் வணிகமகனுக்குத் தருவதாகச் சொல்லி அவனிடமிருந்து பொருள் பெற்று, அவனுக்கு ஆறுபெண்களையும் தராது ஏமாற்றினான். இறுதியாக ஏழாமவள் தாய் தந்தையர் அறியாவண்ணம் அவ்வணிக மகனைத் திருமணம் செய்து கொள்ள எண்ணம் கொண்டாள். ஆனால் அவளின் துர்ப்பாக்கியம் 'திருமருகலில்' அவர்கள் தங்கும்போது வணிகமகனான இவளின் கணவன் அரவந் தீண்டி இறந்து விடுகின்றான். தாய் தந்தை ஆதரவும் இலாது, காதலனின் துணையும் இலாது வருந்தி ஈசனிடம் அவள் அழுதாள். இவ்வழுகை ஒலி ஞானசம்பந்தருக்குக் கேட்க, 'சடையாய் எனுமால்' என்னும் பதிகம்பாடி வணிகமகனை உயிர்ப்பித்தார்.

''பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்றான். சூழ்ந்த பொருவில்
திருத்தொண்டர் குழாம்பொலிய ஆர்ப்ப,
அங்கையினை உச்சிமேற்குவித்துக் கொண்டங் கருட்காழிப்
பிள்ளையார் அடியில் வீழ்ந்த
நங்கையவள் தனைநயந்த நம்பியோடு நானிலத்தில்
இன்புற்று வாழும் வண்ணம்
மங்குல்தவழ் சோலைமலி புகலிவேந்தர் மணம்புணரும்
பெருவாழ்வு வகுத்து விட்டார்''[15]

இவ்வாறு இவர் சம்பந்தரால் மணவாழ்வு பெற்ற சிறப்பு குறிப்பிடப் பெறுகின்றது.

4.2.2.1.3. பூம்பாவை

மயிலாபுரிப் பகுதியில் வாழ்ந்த சிவநேசர் என்ற செல்வர்க்குப் பூம்பாவை என்ற பெண் பிறந்தாள். மகள் வளர்ந்தவுடன், தமது செல்வங்களையும், மகளையும் சிவநேசர் சம்பந்தர்பால் ஏற்பட்ட பக்தி காரணமாகத் தன் எண்ணத்தில் அவருக்கு அடிமையாக்கினார்.

பூம்பாவை ஒருநாள் பூக்கொய்யச் சென்றவிடத்து, ஊழ்வினையின் காரணமாக அரவம் தீண்ட, உயிரற்று வீழ்கின்றாள். இந்நிகழ்வால் சிவநேசர் துயர்வுற்றாலும், பூம்பாவையின் உடலை எறித்து அதன் சாம்பலையும், எலும்பையும் ஒரு குடத்திலிட்டுப் போற்றி வந்தார். சம்பந்தரின் அடிமைப் பொருளாகி விட்டமையால், பூம்பாவையைச் சம்பந்தர் வந்து உயிர்ப்பிப்பார் என நம்பி வந்தார். இவரின் நம்பிக்கை ஈடேறும் வண்ணம், சம்பந்தர் வந்து, திருக்கபாலீச் இறைவனின் அருளைக்கொண்டு பதிகம்பாடி பூம்பாவையை உயிர்ப்பிக்கின்றார். உயிர்ப்பித்த பூம்பாவையைச் சிவநேசர், சம்பந்தரிடம் மணந்துகொள்ள வேண்டுகின்றார். ஆனால் சம்பந்தர்,

''மற்றவர் தமக்குவன் புகலி வாணர் நீர்
பெற்ற பெண் விடத்தினால் வீந்த பின்னையான்
கற்றைவார் சடையவர் கருணை காண்வர
உற்பவிப் பித்தலால் உரைதகாதென''[16]

என மறுத்துவிடுகின்றார். இதனால் பூம்பாவை கன்னியாகவே கன்னிமாடத்தில் இருந்து இறைவனையே எண்ணிப் பெரும் பேறடைகின்றாள். பெரியபுராணத்தில் பூம்பாவைக்கு மட்டுமே உருவநலன் மிக்குப் பேசப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அரவால் மாண்டு - ஞானப் பிள்ளையால் உயிர்பெற்ற சிறப்புடையவர் இவர்.

4.2.2.2. சுந்தரரால் துயரந் தீர்ந்தோர்

திருப்புக் கொளியூரில் இரு அந்தணர் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. அக்குடும்பங்களில் ஒத்த வயதுடைய இரு சிறுவர்கள் இருந்தனர். ஒருமுறை இவ்விரு சிறுவர்களும் குளிக்கச் சென்றனர். இதில் ஒரு சிறுவனை மட்டும் முதலையுண்டுவிட, மற்றவன் பிழைத்துக கொள்கிறான். மாண்டவனை நினைத்து அவன்வீட்டில் அழுகை ஒலியும், மற்ற வீட்டில் மீண்ட சிறுவனுக்கு உபநயனச் சடங்கு செய்யும் மங்கல ஒலியும் கேட்கின்றது. இவ்விரு மாறுபட்ட ஒலிகளையும், அங்குவந்த சுந்தரர் கேட்டு 'நிகழ்ந்தது என்ன?' என வினவினார். அறிந்தபின் இறந்த மகனுடைய வீட்டிற்குச் செல்கின்றார். அவ்வீட்டில் இருந்த அந்தணத் தாய் மகன் இறந்ததால் ஏற்பட்ட துயரத்தையும் பொருட்படுத்தாது சுந்தரர் வருகையை எண்ணி மகிழ்ந்து வரவேற்கின்றாள். இவளின் இச்செய்கையைக் கருதிச் சுந்தரர் இறந்த பிள்ளையைப் பதிகம்பாடி உயிர்ப்பிக்கின்றார். இவ்வாறு சுந்தரரால் தாய் ஒருத்தி துயரம் தீர்ந்திருக்கிறாள் என அறிய முடிகின்றது.

> ''பெருவாய் முதலை கரையின்கண் கொடுவந் துமிழ்ந்த
> பிள்ளைதனை
> உருகாநின்ற தாய் ஓடி எடுத்தக் கொடுவந்து யிரளித்த
> திருவா ளன்தன் சேவடிக்கீழ்ச் சீலமறையோ னொடு
> வீழ்ந்தாள்''[17]

இப்பாடலில் இடம் பெற்ற தாய் - மாண்ட பிள்ளையைப் பெற்ற சிறப்புடைய பெண்ணாக விளங்குகிறாள்.

4.2.3. நாயன்மார்களின் வாழ்வையொட்டி இடம் பெற்ற பெண்கள்

சூராட்டி, பரமதத்தனின் இரண்டாவது மனைவி, அவளின் மகள், மூலன் மனைவி, சடங்கவிச் சிவாச்சாரியார் மகள் என்ற ஐவர் இவ்வகையில் அடங்குகின்றனர்.

4.2.3.1. சூராட்டி

திண்ணன் என்ற கண்ணப்பரின் பிறப்பிற்காக, அவரின் பெற்றோர் பல தெய்வக்கடன்களை இயற்றினர். அதிலொன்று வேலனை நினைத்து வெறியாட்டு வித்ததாகும். அவ்வெறியாட்டிற்குத் தலைமை தாங்கினவள் 'சூராட்டி' என்ற வேடர்குலப் பழமைப் பெண்ணாவாள். அத்தோடு இவள் கன்னி வேட்டையாடத் திண்ணன் செல்லும்போது வாழ்த்தி அனுப்பினாள். இவ்வளவே இவளின் செயல்கள் ஆகும்.

4.2.3.2., 4.2.3.3. பரமதத்தனின் இரண்டாவது மனைவியும் மகளும்

காரைக்கால் அம்மையாரின் கணவன் பரமதத்தன். அவன் அம்மையாரை விட்டு விட்டுப், பாண்டிநாட்டுக் கடற்கரை நகரொன்றில் வாழ்ந்த வணிகரின் மகளை இரண்டாவதாக மணந்தான். அவளின் மூலம் ஒரு பெண் மகவையும் பெற்றெடுத்தான். அம்மகவிற்குப் புனிதவதி எனக் காரைக்காலம்மையாரின் இயற்பெயர் இட்டான். இச்செய்தியை,

> ''தானும்அம் மனைவி யோடுந் தளர்நடை மகவி னோடும்
> மானிளம் பிணைபோல் நின்ற மனைவியார் அடியில்
> தாழ்ந்தே!
> யான்உம தருளால் வாழ்வேன் இவ்விளங் குழவி தானும்
> பான்மையால் உமது நாமம் என்றுமுன் பணிந்து
> வீழ்ந்தான்''[18]

என்ற பாடல் புலப்படுத்துகின்றது.

4.2.3.4. மூலன்மனைவி

சாத்தனூரில் மூலன் என்ற மாடு மேய்ப்பவன் பசுக்களை மேய்த்து வரும் தொழில் புரிந்து வந்தான். ஒருமுறை இவனைப் பாம்பு தீண்டிவிட இவன் இறக்கின்றான். இதனால் இவன் வளர்த்த பசுக்கள் இவனின் வழிகாட்டுதல் இன்றித் தனியே வருந்தின. பசுக்களின் வருத்தமறிந்த சிவயோகி ஒருவர், பசுக்களின் துயர் தீர்க்க, தன்உடல் நீத்து அவனின் உடலில் தங்கி உயிர்த்தார். இதனால் பசுக்கள் மகிழ்ந்தன. பின் அப்பசுக்கள் தத்தம் வீடுநோக்கிச் சென்றன. மூலனின் உடலில் இருந்த யோகியாரும் அவற்றோடு சென்று மூலன் வீட்டருகில் நின்றார். அப்போது வெளிப்பட்ட மூலனின் மனைவி சிவயோகியாராகிய மூலன் உடலைத் தொட்டு வீட்டுக்கு அழைக்க முற்பட்ட போது - உனக்கும் எனக்கும் எத்தொடர்பும் இல்லை எனச் சொல்லி யோகம் புரியச் சென்று விட்டார். இதனால் மூலனின் மனைவி அழுது கலங்கி, அடுத்தநாள் ஊராரிடம் சொல்ல, அவர்களும் யோகியாரைப் பற்றியும், மூலனைப் பற்றியும் தனித்தனியாக அறிந்து உணர்ந்தனர்.

''அங்கவளும் மக்களுடன் அருஞ்சுற்றம் இல்லாதாள்
தங்கிவெரு வுறமயங்கி என்செய்தீர் எனத்தளர
இங்குனக் கென்னுடன் அணைவான் றில்லைஎன
எதிர்மறுத்துப்
பொங்குதவத் தோர் ஆங்கோர் பொதுமடத்தினுட்
புகுந்தார்''[19]

என யோகியின் செயலைப் பெரியபுராணம் விவரிக்கிறது. பெரிய புராணத்தில் மூலனின் மனைவி பற்றிய குறிப்பு இத்தகைய அளவில் இடம் பெறுகின்றது.

4.2.3.5. சடங்கவிச்சிவாச்சாரியார் மகள்

மணம்வந்த புத்தூரில் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளான இவர்க்கும், சுந்தரருக்கும் திருமணம் நடைபெறுவதற்கான ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. அவ்வமயம் வேதியர் வடிவில் இறைவன் வந்து சுந்தரரைத் தமது அடிமையென்றுதடுத்து

ஆட்கொள்கின்றான். இதனால் திருமணம் தடைப்படுகின்றது. திருமணம் நடைபெறாததால், சடங்கவி சிவாச்சாரியாரின் மகள் நம்பியாரூரரை நினைத்தே பெரும்பதம் அடைகின்றாள்.

"அயலோர்தவம் முயல்வார்பிறர் அன்றேமணம் அழியும்
செயலால் நிகழ் புத்தூர்வரு சிவவேதியன் மகளும்
உயர்நாவலர் தனிநாதனை ஒழியாதுணர் வழியில்
பெயராதுயர் சிவலோகமும் எளிதாம்வகை பெற்றாள்"[20]

எனச், சடங்கவி சிவாச்சாரியாரின் மகளின் முடிவைப் பெரியபுராணம் குறிக்கின்றது.

4.3. முடிவுகள்

1. பெரியபுராணத்தில், தாயர், உடன்பிறந்தாள், மகள் என்ற மூவகை உறவுப் பெண்கள் குறிப்பிட்ட அடியார்களின் தொண்டுக்குத் துணை நின்று, அதனால் பெருமை பெற்றுள்ளனர்.
2. உறவுமுறை இல்லாத பிற பெண்கள் என்ற பகுதியில் இடம்பெற்றுள்ள பணியாளராக விளங்கிய பெண், தான் பணியாற்றும் இல்லத்தார் எண்ணங்களுக்கு மாறுபாடில்லாது இயைபு படுத்திக் கொண்டமையால் பெருமை பெற்றிருக்கின்றனர்.
3. அடியார்களின் அருள்நோக்கால் அல்லது அருட் செயலால் தம் துயர் தீர்ந்த பெண்கள் அடியார்களின் பெருமையைச் சார்ந்தமையால் பெருமை பெற்றுள்ளனர்.
4. அடியார்களின் வாழ்வில் இடம் பெற்ற பெண்மையர், தம் செயல்களால் அல்லது தம் பண்புகளால் பெருமை பெறவில்லை என்றாலும், அடியார்களின் வரலாற்றில் இடம் பெற்றமையினாலே பெருமை பெற்றுள்ளனர்.

குறிப்புகள்

1. பெ.பு. கண்ணப்ப.நா.பு.பா.9
2. பெ.பு.சண்டேச.நா.பு.பா.11

3. திருக்.350
4. பெ.பு.திருநாவுக்கரசு.நா.பு.பா.17
5. மேற்படி,பா.18 : 3-4
6. பெ.பு.திருஞான சம்பந்த.நா.பு.பா.16
7. மேற்படி, பா.44.
8. பெ.பு.கோச்செங்கட் சோழ. நா.பு.பா.10
9. பெ.பு.திருநாவுக்கரசு.நா.பு.பா.34
10. பெ.பு. ஏயர்கோன்கலிக்காம.நா.பு.பா.39
11. பெ.பு.சிறுத்தொண்ட.நா.பு.பா.75
12. புறநானூறு திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை.1. 1964, பா.191.
13. சம்பந்தர் தேவாரம், ப.259
14. பெ.பு. திருஞானசம்பந்த.நா.பு.பா.319.
15. மேற்படி, பா.483
16. மேற்படி, பா.1114
17. பெ.பு, வெள்ளானைச் சுருக்கம், பா.12.
18. பெ.பு.காரைக்கால்.அ.பு.பா.45.
19. பெ.பு. திருமூல. நா.பு.பா.18.
20. பெ.பு.தடுத்தாட் கொண்ட.பு.பா.77.

✸.... பின்னிணைப்பு

5. ஆய்வின் முடிவுகள்

1. பெரியபுராணத்தில் நாற்பத்திரண்டு பெண்கள் இடம் பெறுகின்றனர்.

2. இத்தொகையில் மூன்று பெண்கள் நாயன்மார்களாகவும், இருபத்தொரு பெண்கள் நாயன்மார்களின் மனைவியராகவும், எட்டுப் பெண்கள் நாயன்மார்களின் உறவுமுறைப் பெண்களாகவும், பத்துப் பெண்கள் பிறநிலைப் பெண்களாகவும் அறியப்படுகின்றனர்.

3. காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார் ஆகிய மூவரும் நாயன்மார்களாகப் பெருமை பெற்றோர் ஆவர். இம்மூவரும் ஆண்களுக்கு நிகரான சமயஉரிமை பெற்ற பெண்களாகக் காட்டத் தக்கவர்களாவர்.

4. காரைக்காலம்மையார் 'அம்மை' என்று இறைவனால் அழைக்கப்பட்டமையினாலும், மங்கையர்க்கரசியார் பாண்டிய நாட்டில் சைவநெறி ஓங்கச் செய்தமையினாலும், இசைஞானியார் இறைவன் தோழரான சுந்தரரைப் பெற்றமையாலும் நாயன்மார்கள் என்ற பெருமையில் வைத்துப் போற்றப்படுகின்றனர்

5. நாயன்மார்களின் மனைவியரான இருபத்தொரு பெண்களில், மனைவியர் என்ற சிறப்பினராக எழுவரும், கணவன்வழியே தன் வழியாகக் கொண்டவராக அறுவரும், கணவன் செயலுக்கு வழிகாட்டினவராக நால்வரும், கணவன் வழி கடிந்தவராக மூவரும், கணவனை விஞ்சியவராக ஒருவரும் அறியப்படுகின்றனர்.

6. நாயன்மார்களின் மனைவியரான பெண்கள் சுற்றம் ஓம்பல், நல்ல புதல்வரைப் பெறுதல், சிவன்மேல் பற்றுக் கொள்ளுதல் ஆகிய பண்புகளைக் கொண்டு, சிறந்தனர் எனலாம்.

7. உறவுமுறைப் பெண்கள், பிறர் என்ற வரிசையில் பதினெட்டுப்

பெண்கள் இடம் பெறுகின்றனர். அவர்களில் உறவுமுறையினர் என்ற முறையில் தாயர் என்ற உறவில் ஐவரும், தமக்கை என்ற உறவில் ஒருவரும், மகள் என்ற உறவில் இருவரும் ஆக எண்மர் இடம் பெறுகின்றனர். பிறர் என்ற வரிசையில் பணியாளர் என்ற நிலையில் ஒருவரும், நாயன்மார்களால் துயர்தீர்ந்தோர் என்ற முறையில் நால்வரும், நாயன்மார் வாழ்வொட்டி இடம் பெற்றோர் என்ற முறையில் ஐவரும் இடம் பெறுகின்றனர்.

8. மேற்குறிப்பிட்ட அனைவரும், நாயன்மார்களைச் சார்ந்து நின்று, அவர்களின் செயல் சிறப்பாலே பெருமை பெற்றோர் ஆவர்.

9. பெரியபுராணத்தில் இடம்பெற்ற பெரும்பான்மையான நாயன்மார்களது அருமைபெருமைகள், அதில் அவர்கள் பெற்ற வெற்றி முதலாயின அனைத்தும் அவர்களது வாழ்வில் தொடர்புபெற்ற பெண்களின் தகுதியால் விளைந்தவையே என்பது தெளிந்த முடிவாகும்.

பெரியபுராணப் பெண்களைச் சமயநோக்கில் மட்டும் காணாது, சமுதாய நோக்கில் காணும் ஆய்வுகள் வளரவேண்டும். இப்பெண்களை மற்ற சமயப் பெண்மக்களோடு ஒப்பிட்டுக் காணும் ஒப்பிலக்கிய ஆய்வும் வளரவேண்டும். பெண்ணிய வாசிப்பில் இவர்களின் உண்மை நிலையினை ஆராயும் ஆய்வுகளும் முகிழ்க்க வேண்டும்.

பின்னிணைப்பு

1. நாயன்மார் எனப் பெருமை பெற்ற பெண்கள் :

1. காரைக்கால் அம்மையார்.
2. மங்கையர்க்கரசியார்.
3. இசைஞானியார்

2. நாயன்மார்களின் காதல்மனைக் கிழத்தியர் :

அ. மனைவியர் என்ற சிறப்பினர் :

1. மெய்ப்பொருள் நாயனாரின் மனைவி
2. அமர்நீதி நாயனாரின் மனைவி
3. மானக்கஞ்சார நாயனாரின் மனைவி
4. நமிநந்தி நாயனாரின் மனைவி
5. ஞானசம்பந்த நாயனாரின் மனைவி
6. கோட்புலிநாயனாரின் மனைவி
7. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரின் மனைவி

ஆ. கணவன் வழியே தன்வழி எனக்கொண்டோர் :

1. இயற்பகை நாயனாரின் மனைவி
2. இளையான்குடி மாறநாயனாரின் மனைவி
3. சிறுத்தொண்ட நாயனாரின் மனைவி
4. கலிக்கம்ப நாயனாரின் மனைவி
5. கலியநாயனாரின் மனைவி
6. கழற்சிங்க நாயனாரின் மனைவி

இ. கணவன் செயலுக்கு வழிகாட்டினோர் :

1. குங்குலியக் கலயநாயனாரின் மனைவி
2. அரிவாட்டாய நாயனாரின் மனைவி
3. அப்பூதி நாயனாரின் மனைவி
4. ஏயர்கோன் கலிக்கம்ப நாயனாரின் மனைவி

ஈ. கணவன் வழி கடிந்தோர் :

1. திருநீலகண்ட நாயனாரின் மனைவி
2. சுந்தரரின் முதல் மனைவியான பரவையார்.
3. இரண்டாவது மனைவியான சங்கிலியார்

உ. கணவனை தனது அருஞ்செயலால் விஞ்சியோர்:

1. திருநீல நக்க நாயனாரின் மனைவி

3.1. உறவுமுறைப் பெண்கள்

அ. தாயார் என்ற உறவினர்:

1. தத்தை (கண்ணப்ப நாயனாரின் தாயார்)
2. பவித்திரையார், (சண்டேச நாயனாரின் தாயார்)
3. மாதினியார் (திருநாவுக்கரச நாயனாரின் தாயார்)
4. பகவதியார் (திருஞானசம்பந்த நாயனாரின் தாயார்)
5. கமலவதியார், (கோச்செங்கட்சோழ நாயனாரின் தாயார்)

ஆ. தமக்கை என்ற உறவினர்:

1. திலகவதியார், (திருநாவுக்கரசு நாயனாரின் தமக்கையார்)

இ. மகள் என்ற உறவினர்:

1. சிங்கடியார், (கோட்புலி நாயனாரின் மகள்)
2. வனப்பகை (கோட்புலி நாயனாரின் இரண்டாவது மகள்)

3.2. பிற பெண்கள்

அ. பணியாளாகப் பணிபுரிந்தவர்:

1. சந்தனநங்கை (சிறுத்தொண்டர் இல்லத்துப் பணியாளர்)

ஆ. நாயன்மார்களால் துயரந்தீர்ந்தோர்:

1. கொல்லி மழவன் மகள் -சம்பந்தர்
2. வைப்பூர் தாமன் மகள் - ''
3. பூம்பாவை - ''
4. அந்தணத் தாய் - சுந்தரர்

இ. நாயன்மார்களின் வாழ்வையொட்டி இடம் பெற்றவர்கள்:

1. சூராட்டி, (கண்ணப்பர்க்கு வாழ்த்துச் சொன்னவள்)
2. பரமதத்தனின் இரண்டாவது மனைவி
3. பரமதத்தனின் மகள்
4. மூலன் மனைவி
5. சடங்கவி சிவாச்சாரியார் மகள்

3 + 7 + 6 + 4 + 3 + 1 + 5 + 1 + 2 + 1 + 4 + 5 = 42

மொத்தப் பெண்களின் எண்ணிக்கை = 42

துணை நூற்பட்டியல்

அண்ணாமலை, சுப., **மக்களை எட்டிய மறைத்தமிழ்**
மீனாட்சி நூலகம், மேலைச்சிவபுரி,
ஆகஸ்ட், 1988,

அருணாசலம், ப., **சைவசமயம் (ஓர் அறிமுகம்)**
இராமவர்மபுரம், நாகர்கோவில்,
ஆகஸ்ட், 1979.

ஆறுமுகநாவலர்., **பெரியபுராணம் (உரைநடை)**
ஸ்ரீஆறுமுகநாவலர் சைவப் பிரகாச
வித்தியாசாலை அறக்கட்டளை
சிதம்பரம், 1986.

ஆறுமுகநாவலர், கே., **இந்துமத இணைப்பு விளக்கம்,**
அம்பலவாணர் நிலையம்,
ஐந்தாம்பதிப்பு,
நாகர்கோவில், 1978.

இரத்தின சபாபதி. வை., (உ.ஆ) **நால்வர் நான்மணிமாலை,**
மணிவாசகர் நூலகம், சிதம்பரம்,
ஜூன், 1969.

இராமலிங்கத் தம்பிரான், (ப.ஆ) **தேவாரத் திருப்பதிகங்கள் ஏழாந்திருமுறை,**
வெளியீட்டு எண்.555,
தருமையாதீனம்,
1964.

கந்தசாமி, சி., **சைவசமயம்,**
கொழும்பு, விவேகாநந்த
சபைவெளியீடு,
1978, மூன்றாம் பதிப்பு.

குமரகுருபரன் பிள்ளை, டி.எம், **திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரப்பதிகங்கள்,** பன்னிருதிருமுறைப் பதிப்புநிதி வெளியீடு, 8, திருப்பனந்தாள், மே.1961.

,, **பதினோராந் திருமுறை,** பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதிவெளியீடு, எண்.11, திருப்பனந்தாள், பிப். 1963.

சஞ்சீவி. ந.,(தொ.ஆ) **தெய்வத்தமிழ்** சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, 1975.

சாமிநாதையர், உ.வே., **குறுந்தொகை,** அண்ணாமலைப் பல்கலை வெளியீடு, அண்ணாமலை நகர், 1983.

,, புறநானூறு ஜோதி அச்சுக்கூடம், நான்காம்பதிப்பு, சென்னை, 1950.

சித்தலிங்கம், டி.பி., **சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும்,** கஸ்தூரிபா காந்திகன்யா குருகுலம், வெளியீட்டு எண் - 32, வேதாரண்யம், மே. 1984.

சுப்பிரமணியப் பிள்ளை, கே., **பெரியபுராணம்,** பன்னிரு திருமுறை பதிப்பு நிதி, வெளியீட்டு எண் 19, திருப்பனந்தாள், மே. 1970.

சுப்பிரமணிய முதலியார் சி.கே. **பெரியபுராணம்** (கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு - 12) முதற்பகுதி, கோயமுத்தூர். செப்டம்பர் 1937.

" **பெரியபுராணம் இரண்டாம்பகுதி,**
கோவைத் தமிழ்ச் சங்கம்,
கோயமுத்தூர்,
ஜுன், 1950.

" **பெரியபுராணம், ஏழாம் பகுதி,**
கோவை தமிழ்ச்சங்கம், கோயமுத்தூர்,
மே.1954.

சுப்புலட்சுமி, ந., **பெரியபுராணத்தில் பெண்மை,**
பாரிநிலையம், சென்னை, ஜுன் 1966.

சோமசுந்தரத் தம்பிரான் (ப.ஆ) **எட்டாந்திருமுறை,**
வெளியீட்டு எண், 572,
தருமையாதீனம்,
1966.

ஞானசம்பந்தன், அ.ச., **பெரியபுராணம் - ஓர் ஆய்வு**
காஞ்சிபுரம் தத்துவ மையம்,
தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு,
ஜனவரி, 1987.

தமிழவேள்., **சைவசமயம், வினாவிடை,**
முறைவிளக்கம், விஜயலட்சுமி
புத்தகசாலை,
கொழும்பு - 6.

பட்டுசாமி ஓதுவார், தி., **பெரியபுராணம், (உரைநடை)**
திருப்பனந்தாள், செப்டம்பர் 1954.

பாரதிதாசன், **பாரதிதாசன் கவிதைகள் முதல்தொகுதி,**
செந்தமிழ் நிலையம்,
இராமச்சந்திரபுரம்,
புதுக்கோட்டை (மாவ) 1974,
இருபதாம் பதிப்பு.

பாரதியார்., **மகாகவி பாதியார் கவிதைகள்,** வள்ளுவர் பண்ணை, சென்னை, 1990.

பெரியகருப்பன், இராம., **புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாறு** சோலை நூலகம், சதாசிவ நகர் மதுரை, அக்,1980

மறைமலையடிகள் **பழந்தமிழர் கொள்கையே சைவசமயம்** சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 1968.

வச்சிரவேல் முதலியார், க., **சைவம்,** தமிழ்நாடு அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

வீரபத்திரன். ஆர்., **மங்கலவணி,** பாரிநிலையம், சென்னை, ஆகஸ்டு 1968.

வெள்ளைவாரணன், க., **பன்னிரு திருமுறை வரலாறு முதல்பகுதி,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1962.

,, **பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம்பகுதி,** அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம், 1969.

ஜகந்நாதன், கி.வா., **திருக்குறள்,** (ஆராய்ச்சிப் பதிப்பு) ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோவை ஜில்லா, 1963, முதல் பதிப்பு.

குறுக்க விளக்கம்

கா.அ.பு	-	காரைக்காலம்மையார் புராணம்
குறுந்	-	குறுந்தொகை
சே.பு	-	சேக்கிழார் புராணம்
திருக்	-	திருக்குறள்
தி.தொ.பு	-	திருத்தொண்டர் புராணம்
தி.தொ.பு.சா	-	திருத்தொண்டர் புராண சாரம்
தி.தொ.தி.	-	திருத்தொண்டர் திருவந்தாதி
நா.பு.	-	நாயனார் புராணம்
பு	-	புராணம்
பெ.பு	-	பெரிய புராணம்
ம.பு.	-	மங்கையற்கரசியார் புராணம்